உ

SRI NATESA STUTI

OF

Sastracharya panditha

T. RAMALINGA DIKSHITAR,

CHIDAMBARAM.

TAMIL TRANSLATION

by

Sastracharya Panditharaja

SOMASEKHARA DIKSHITHAR,

CHIDAMBARAM

SOMA. SETHU DIKSHITAR

7— SOUTH CAR STREET,

CHIDAMBARAM.

Edited by

Chatussastra Siromani

SOMA SETHU DIKSHITHAR,

(Vyakarana, Nyaya, Vedantha, Meemamsa Siromani)

Vice-President of Suhrt Sabha Vidyalayam, Chidambaram

Printed at the

Sri Meenakshi Press, Sirkali

1967.

உ

SRI NATESA STUTI

OF

Sastracharya panditha
T. RAMALINGA DIKSHITAR,
CHIDAMBARAM.

TAMIL TRANSLATION

by

Sastracharya, Panditharaja
SOMASEKHARA DIKSHITHAR,
CHIDAMBARAM

Edited by

Chatussastra Siromani
SOMA SETHU DIKSHITHAR,
(Vyakarana, Nyaya, Vedantha, Meemamsa Siromani)
Vice-President of Suhrt Sabha Vidyalayam, Chidambaram

Printed at the
Sri Meenakshi Press. Sirkali

1967.

உ

PREFACE.

श्रीमान् ताण्डवपण्डितो विजयते श्रीराजचूडामणिः
श्रीमद्भूधरराजजा विलसितः श्री नीलकण्ठशिवः ।
श्रीमत्तिल्लवनैकवासरसिकः श्रीपुण्डरीकप्रभुः
दद्यान्मङ्गल सन्ततिं श्रुतिनुतः वेदान्तसर्वस्वदः ॥

இந்த ஸ்ரீ நடேச ஸ்துதியானது சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் கோயில் டிரஸ்டியும், பூஜகரும், நமது பாவுகருமான, காலஞ்சென்ற, சாஸ்த்ராசார்ய பண்டித ப்ருஹ்மஸ்ரீ தங்க ராமலிங்க தீக்ஷிதர் அவர்களால் 1919ல் ஸ்ரீ நடேசரிடம் உள்ள அபார பக்தி விசேஷத்தாலும் "स्तुहि श्रुतं गर्तसदं युवानं" இது முதலான சதருத்ரீய ச்ருதி வசனங்களால் பரமேச்வரனை ஸ்துதி செய்தே த்ருப்தி செய்யவேண்டும் என்ற காரணத்தாலும், மணிவாசகர் முதலிய பக்த சிகாமணிகள் தேவாரம் முதலிய ப்ரகாசக வாக்ரூபமான, என்றும் வாடாத ஸ்துதி குஸும ஹாரங்களையே தேவர்களுக்கு மாலையாக அர்ப்பித்தனர் என்ற காரணத்தைக் கொண்டும் இயற்றப்பட்டது. இச் சிறந்த ஸ்துதியில் பல விருத்தங்களில் ச்லோகங்கள் அமைந்துள்ளன. இதில் சிதம்பர மஹிமையும், ஸ்ரீ நடராஜமூர்த்தி தத்துவமும், வ்யாக்ரபாத, பதஞ்சலி, உபமன்யு முதலிய பக்தர்களின் பக்திச் சிறப்பும், அத்வைத தத்துவமும் மிகச் சிறந்த முறையில் வெளியிடப்பட்டுள்ளன.

இதைப் பலர் பார்த்துத் துதித்துப் பயன் அடையக் கருதி 1931ல் கும்பகோணம் ஆர்ய தர்மப் பத்திரிகையில் தமிழ் விரிவுரையுடன் வெளிபிடப்பட்டது. பிறகு மேற்படி பிரதி கிடைப்பது அரிதான காரணத்தால் பலர் மீண்டும் வெளியிட வேண்டும் எனக் கருதியதனுல் "வைதிக தர்ம வர்த்தனி" என்ற மாதப் பத்திரிகையில் 1964 முதல் 1966 முடிய தொடர்ந்து வெளியிடப் பட்டது. பலர் தனிப் புத்தகமாக விரும்பியதன் காரணமாக இப்பொழுது வெளியிடப்படுகிறது. இதை ஸ்ரீ நடராஜர் சன்னதியில் பக்தர்கள் பிரதி தினம் படித்து அவருடைய அருளால் நல்லறிவையும், ஸத்புத்ரர்களையும், தனப் பெருக்கையும் அடைய வேண்டுமென ஸ்துதி கர்த்தா 123-வது ஸ்துதியில் கூறியுள்ளபடி ஸ்ரீ நடராஜர் க்ருபைக்குப் பாத்ரர்களாக விரும்புகிறேம். இதனை நல்ல முறையில் பக்தி விசுவாசத்துடன் அச்சிட்ட சீர்காழி, ஸ்ரீ மீனுக்ஷி பிரஸ் உரிமையாளர் ஸ்ரீ A. வெங்கட்டராமய்யர் அவர்களுக்கும், ச்லோகஸூசி, விஷயஸூசி, பிழைத் திருத்தம் முதலியன அமைத்துக் கொடுத்த "ஸுஹ்ருத்ஸபா" வித்யாலய மாணவியும் Telephone Operator ருமான குமாரி D சுலோசனுவுக்கும் எல்லா ஸௌபாக்யங்களும் உண்டாக ஸ்ரீ நடராஜர் அருளால் ஆசீர்வதிக்கின்றேம்.

எல்லாம் ஸ்ரீ நடராஜர் க்ருபை.

பிலவங்க சித்திரை-19 2—5—67, மங்களவாரம்.	சாஸ்த்ராசார்ய பண்டிதராஜா, ஸோமசேகர தீக்ஷிதர், நெ. 100. தெற்குவீதி, சிதம்பரம்.

॥ श्रीनटेशस्तुति श्लोकानामकारादिक्रमेण सूची ॥

श्लोकाः	पुटम्	श्लोकाः	पुटम्
अप्ययज्वतिलकः	89	त्वत्क्षेत्रेष्विदमुत्तमं	34
अपारसंसार	75	त्वत्पादपद्मं	86
अभ्रंल्यापि सभामहः	37	त्वत्पूजासमये	49
आपृष्ठलंबि	74	त्वद्भक्त्यैव सभेश	58
उद्यत्फणारत्न	54	त्वद्भक्तलोक	85
कद्रुद्र श्रुतितात्पर्य	9	त्वद्भक्तिसेतुं	57
कालेऽस्मिन्	40	दीनानामभय	22
कुर्वन् दीक्षित	52	दुग्धं खेदमुपेयुषि	49
कुर्वन् विनिंद्य	90	देहोयं	39
कृतान्तसंत्रास	75	द्रष्टव्येषु	60
कैलासाचलताण्डवं	32	द्रष्टुर्नैवास्ति	80
कैलासादिमुखानि	34	द्राक्षामदक्ष	2
गणनाथं कुमारं च	1	नटपतिपदपद्म	95
गीर्वाणाः कति वा	16	नमामि गोपुराणीश	34
गौरीवक्त्रसरोरुहे	53	नाथ त्वच्चरणारविन्दनिकटे	54
चञ्चच्चन्द्रकलं	76	नाथ त्वच्चरणारविन्दममलं	56
चन्द्रस्त्वयेश	72	नाथ त्वत्पदपङ्कजे	65
चित्सभामध्यगं	4	नाथ त्वत्स्मरणं	61
जननिजगति	1	नाथ त्वदंघ्रि कमले	87
जाने नो जनने	58	नाथ त्वदंघ्रि महमद्यं	88
ज्ञानानन्द	43	नाथ त्वदंघ्रिविनिवेशित	86
तद्भन्नटेश	92	नाथ त्वदंघ्रि सरसोरुह	91
तव शिव	7	नाथ त्वदंघ्रि सविधे	88
तस्मादनन्ययतिं	72	नाथ त्वदंघ्रिविषय प्रबंध	8
तिल्वारण्य	63	नाथ त्वदीय करुणामव लब्ध	92
तृष्णा शङ्कर	71	नाथ त्वदीय करुणारस पूर्णदृष्टिः	73
त्यक्त्वा कल्पतरुं	59		
त्वत्कारुण्य लता	84		

श्लोकाः	पुटम्	श्लोकाः	पुटम्
नाथ त्वदीय चरणांबुज पूजकं	74	मिथ्याज्ञानसमाह्वया	83
नाथ त्वदीय चरणांबुजयो	92	यत्तत्त्वाबोधजाते	81
नाथ त्वन्मुखपद्म	44	यत्नोऽयमीश	91
नानायोनिषु	70	यद्वासैव	2
नामं नामं	46	यस्त्रय्यन्तवचः	5
नालंकृतिर्मम	89	यस्मादेव	5
नाहं पूजयितुं	20	यः क्रोधान्ध	6
नृत्यनित्यं	79	यः प्राह स	3
पतंजलिः	12	यः श्रोतव्यतया	76
पाण्डयो दुर्मद	29	राजानं समुपैति	45
पार्श्वद्वये	15	लोके सन्ति	45
पुत्रादिबन्धु	71	लोके संसृति	83
प्राप्तस्त्वत्कृपया	15	वन्द्यानामपि	60
बालोहं भगवन्	20	वांछा नैव	50
बुद्ध्वा सद्गुरुबोधितं	67	विहितमविहितं वा	73
भक्तानन्दन	43	वेदैक गम्यं	1
भक्त्यार्थे तत्र सन्निधौ	22	वैराजहृन्मध्य	75
भक्त्या शङ्कर	48	शंभो मामकमानसाख्य	44
भद्रभद्रीन्द्रजा	4	शम्भो यां करुणां	24
भवजलधि	86	शार्दूलांघ्रि	61
भीतिं त्वं विजहीहि	57	शैलेन्द्र कन्या	54
भुक्त्वा यस्तृणवत्	59	श्रीमच्चिन्मय	67
मदीयतुल्या	94	श्रीमद्राजसभान्तरे	55
मस्ते दिव्यधुनीं	52	श्रीमद्व्योम	48
माध्यंदिनिः	10	श्रीमद्धेम सभानाथ	95
मायाते	64	श्रीमद्धेम सभोज्वलं	82
माया मोहितमानसस्य	47	श्रीमन्नटेशविनुतिं	94
		श्रीमन्नटेशविनुतौ	93

श्लोकाः	पुटम्	श्लोकाः	पुटम्
श्रीमान् कर्मपरायणः	28	सृष्ट्वा सर्वमिदं	80
श्रीमानप्पयदीक्षितः	29	स्तम्भो हेममयः	38
श्रेष्ठं स्थानमिदं	31	स्वामिन् गर्भनिवास	66
संख्यातीत	7	स्वामिन् तावकगोपुराणि	38
संसाराख्य	21	स्वामिन्प्रत्यहमाचरामि	41
सत्यं ब्रवीमि	85	स्वामिन्भूसुरपीडन	41
सन्धार्य वह्निमपि	93	स्वामिन् मामकमानसं	50
सर्वं त्वन्मयमेव	68	स्वामिन् यत्तव ताण्डवं	32
सहस्रपंचके	96	स्वामिन् शब्दनये	8

ஸ்ரீ நடேசஸ்துதி சுலோகங்களின் கருத்தின் சுருக்கம்

விஷயச்சுருக்கம்	சுலோகம்	விஷயச்சுருக்கம்	சுலோகம்
அப்பய்யதீக்ஷிதரின் முக்தி	113	எல்லாம் சிவமயம்	50
அப்பய்யதீக்ஷிதரின் பக்தி	30	எல்லாம் நாதனே	23
அபயமுத்திரை தரித்தவர்	100	கண்ணப்பன் பக்தி	115
அம்ருத கருணை	47	கருணாரஸ கடாக்ஷம்	89
அருமருந்து	40	கருணாநிதி	124
அறிவில்லாதவன் பஜனை	22	கருணையினால் பாபபரிசுத்தி	42
அன்னையின் கருணை	4	கருணையை இச்சித்தல்	48
ஆகாயத்தை வியாபிக்கும் சிதம்பரம்	36	காமனை ஜயித்தல்	88
ஆத்மஸ்வரூபீ	91	காரிய காரணம் எல்லாம் ஈசனே	82
ஆத்மார்ப்பணம்	81	காருண்ய மழை	46
ஆறுகால பூஜையில் ரஹஸ்ய தர்சனம்	102	குடும்ப ரக்ஷகர்	109
ஆனந்தபாஷ்ப பிரவாஹம்	105	குஷ்டரோக நிவாரணம்	28
ஆனந்த ரூபீ	119	கோபுரங்களுக்கு நமஸ்காரம்	39
ஈச்வரார்ப்பணம்	127	சக்திக்குத் தகுந்த பூஜை	118
உத்தமமானவை எவை ?	74	சக்தியுடன் கூடியவர்	97
உபமன்யுமஹர்ஷியிடம் கருணை	55	சரணத்யானமே மோக்ஷ ஸாதக வழி	72

விஷயச்சுருக்கம்	சுலோகம்
சரண பூஜையால் ஸுகம்	69
சரண பூஜையினுல் சரணத்தை அடைதல்	56
சரணுகதி வேண்டல்	90
சரணுரவிந்த பக்தி	116
சரணுரவிந்த புஷ்பரஸம்	87
சாந்தனின் பக்திக்குக் கருணை	123
சித்ஸபாநாயகரின் ஸ்வரூப வர்ணனம்	59
சித்ஸபையில் பூர்ண அம்சம்	34
சிதம்பரத்திலேயே ஜனனம் வேண்டல்	80
சிதம்பரமே சிவமயம்	32
சிவசரணமே மோக்ஷ ஸுகம் அளிப்பது	21
சிவமஹிமை	13
சௌனக மஹரிஷியின் புண்யம்	27
டக்கா நாதம்	98
த்யானம்செய்பத் தகுந்தவர்	96
த்வஜஸ்தம்ப மஹிமை	37
தத்வார்த்தத்தை உபதேசித்தவர்	9
தத்வார்த்தம்	121
தன்ய புருஷர்கள்	75
தாண்டவமூர்த்தி	45
திவ்யசரண வாஸம்	106
திவ்யஜ்யோதி	5
திவ்ய மங்களமூர்த்தி நமஸ்காரம்	60
திருபுரஸம்ஹாரி	24
தீக்ஷிதர்கள் பூஜிக்கும் சரணம்	19
தீக்ஷிதர்களிடம் தயை	58
தீக்ஷிதர்களுள் ஒருவர்	6
தீனதயாளன்	67

விஷயச்சுருக்கம்	சுலோகம்
துக்கநிவாரகர்	25
துக்கநிவாரண ஸமர்த்தர்	57
துர்மதனுக்கு மோக்ஷம்	31
தோஷமுடைய வஸ்துக்களால் அலங்காரம்	86
நடேச தர்சன மஹிமை	33
நடேச நாம வாஸனை	122
நடேசாருளால் துதி செய்தல்	15
நடேசஸ்துதி மஹிமை	124
நித்ய ச்ரேயஸை அடைதல்	85
நான்கு கோபுர மஹிமை	38
பக்தர்களுக்கு கல்பகவிருக்ஷம்	92
பக்தனைக் காப்பவர்	26
பக்தி உண்டாகக் காரணம்	20
பக்திக்கொடி உண்டாகுதல்	41
பக்தி நமஸ்காரம்	53
பக்தியால் முக்தி	83
பக்தி ஸேதுவின்ஸஹாயம்	68
பஞ்சாக்ஷர ரூபமார்க்கம்	103
பதஞ்சலி சரித்ரம்	18
பரம வைராக்யம்	65
பாண்டித்யம் இல்லாதபூஜை	114
பார்வதீ பதி	8
பிரகாசிக்கும் புஷ்பம்	120
பிறவிப்பயன்	108
புலிக்ரீடை செய்தவர்	73
புலித் தோலால் அலங்காரம்	62
மந்த்ர ச்ரேஷ்டரூபம்	66
மாயையைத் தாண்டுதல்	77
மார்க்கண்டர், ஜனகர் பக்தி	70
முக்தி பலன் அடைதல்	49
முக்தியளிப்பவர்	12
முன்ஜன்ம புண்ணியம்	52
மூடனின் தோத்திர பலன்	14
மூர்த்தி தர்சனம்	54
மோக்ஷப்பழம் கொடுப்பது	104

விஷயச்சுருக்கம்	சுலோகம்
மோக்ஷம் வேண்டுதல்	99
ரக்ஷிக்கும் அன்னை	3
ராஜஸபை	64
வ்யாக்ரபாத ஜன்ம ஸாபல்யம்	17
வ்யாபகரான நடேசர்	95
வருணனின் மகா பாப விமோசனம்	43
வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்	112
விஷயாசை விலகவேண்டுதல்	84
வேதங்களால் அறியத் தகுந்தவர்	2
வேதாந்த வேத்யமான சரணம்	51
ஸ்திரமான முக்தி	44
ஸ்தோத்ர ஆரம்பம்	1
ஸ்வர்ணஸபை மூர்த்தி	101
ஸ்வரணாகர்ஷண பைரவ மூர்த்தி	63
ஸ்ருஷ்டிகர்த்தா	10
ஸகல பூமண்டல நாயகர்	71
ஸகல மங்கள நாயகர்	107
ஸச்சிதானந்தமூர்த்தி	7
ஸபாநாயகரின் அணிகள்	61
ஸம்ஸாரதாரணம்	93
ஸம்ஸாரநாசம் வேண்டல்	94
ஸம்ஸாரபந்தம் இல்லாதவர்	76
ஸம்ஸாரஸாகரம் கடத்தல்	78
ஸரளமான ஸ்தோத்ரம்	111
ஸரஸகுண ஸ்துதி	125
ஹ்ருதயத்தில் வசிப்பவர்	16
ஹ்ருதயஸ்தான சிதம்பரம்	35
ஜகத்ஸம்ரக்ஷகர்	11
ஜன்ம பலன்	110
ஜன்மஸாபல்யம்	117
ஜனனமில்லாதிருக்க வழி	79
ஜைமினி மஹர்ஷி முக்தி	29

॥ श्री नटेशस्तवः ॥

ஸ்ரீ நடேச ஸ்துதி.

ஸ்துதி கர்த்தா :— சிதம்பரம் இராமலிங்க மகி.

உரையாசிரியர் :—

சிதம்பரம், சாஸ்த்ராசார்ய ஸ்ரீ ராஜா ஸோமசேகர தீக்ஷிதர்.

गणनाथं कुमारं च शारदां गिरिजां मुहुः ।
प्रणम्य ललितस्तोत्रं करोमि नटतुष्टये ॥ १

கணபதியையும், ஷண்முகரையும், ஸரஸ்வதியையும், பார்வதியையும் பல தடவை நமஸ்கரித்து நடேசருடைய திருப்தியின் பொருட்டு ஸுந்தரமான ஸ்தோத்ரத்தைச் செய்கிறேன்.

वेदैकगम्यमखिलामरवन्द्यमानं आनन्ददांघ्रिसरसीरुहमाप्तकामम्
आपन्नभक्तपरिरक्षणजागरूकंभक्त्या नमामि नटराजमहं सभेशम्

வேதங்களால் மாத்திரம் அறியத் தகுந்தவராயும், ஸமஸ்த தேவர்களால் பூஜிக்கப்படுகிறவராயும், ஆனந்தத்தைத்தருகிற சரணாரவிந்தத்தை உடையவராயும், ஸகல இஷ்டங்களையும் அடைந்தவராயும், தம்மை உபாஸித்த பக்தர்களைக் காப்பாற்றுகிறவராயும் சித் ஸபைக்கு நாயகராயுமுள்ள ஸ்ரீமந் நடராஜரை பக்தியால் நமஸ்கரிக்கின்றேன்.

जननि जगति जातः सागसामग्रगण्यः
तव चरणसरोजे देवि भक्त्या प्रपद्ये ।
विकिर मयि कृपार्द्रालोकनं दीनदीने
भुवि सुतमपराधात्किन्नु माता जहाति ॥ ३

ஓ அம்மையே! "உலகத்தில் ச்ருதி ஸ்ம்ருதி ரூபங்களான உன்னுடைய ஆக்ஞையை உசிதப்படி அனுஷ்டியாததால் பெருங் குற்றவாளியாக ஆகிவிட்டேன். உன்னுடைய பாதாரவிந்தங்களை பக்தியால் நமஸ்கரிக்கிறேன். மூட சிகாமணியான என்னிடம் கருணகடாக்ஷத்தை வர்ஷிக்கவேணும். உலகத்தில் பிள்ளையைத் தாய் குற்றத்தினுல் தள்ளுவதுண்டா? அன்னை அருமைப் புதல்வர்களைப் பாதுகாப்பதுபோல் எங்களை ரக்ஷிக்கவேணும்" என்று இந்திரியங்கள் ப்ராணனைப் பிரார்த்திப்பதாக ப்ரச்னேபநிஷத் கூறுகின்றதன்றே?

द्राक्षासदृक्षसरलाक्षरदानदक्षैः उक्षेन्द्रवाहनटनेक्षण दीक्षितैर्माम् ।
रक्ष त्वदक्षिगतमम्ब कृपाकटाक्षैःपद्माक्षिदक्षतनयेमयि पक्षपातात्

ஓ அன்னையே! ஓ பார்வதியே! உன் ஸன்னிதியை அடைந்து உன் பார்வையில் வந்த என்னை த்ராக்ஷாபாக காவ்ய ஸாமர்த்யத்தைத் தருகிறதுகளாயும் பரமசிவனுடைய நடன தர்சனத்தில் ஸமர்த்தங்களாயும் உள்ள கருணை கடாக்ஷங்களால் விச்வாஸத்தால் காப்பாற்று.

यद्भासैव जगद्विभाति निखिलं यच्चित्स्वरूपं स्वतः
प्रज्ञावद्भिरुपास्यतेऽनुदिवसं यत्स्वीयहृत्पङ्कजे ।
यस्याज्ञावशगास्सुरास्स्वविहितं तन्वन्ति भान्वादयः
दिव्यं ज्योतिरुपास्महे तदमलं श्रीचित्सभामध्यगम् ॥ ५

தன்னுடைய காந்தியால் ஸகல உலகங்களையும் ப்ரகாசிக்கும்படிச் செய்கிறதாயும், ஜ்ஞான ஸ்வரூபமாயும், மஹர்ஷிகளால் ஹ்ருதய பங்கஜத்தில் எப்பொழுதும் உபாஸிக்கத் தகுந்ததாயும், தன்னுடைய ஆஜ்ஞையால் ஸூர்யன் முதலான ஸகல தேவர்களையும் தங்கள்

கார்யங்களை அனுஷ்டிக்கும்படிச் செய்கிறதாயும் சித்ஸபா மத்தியில் இருப்பதாயுமுள்ள திவ்ய ஜ்யோதிஸ்ஸை உபாஸிக்கிறோம்.

यः प्राह स्म समत्वमेव सखिभिः स्वीयांघ्रिपूजारतैः
स्वस्यैवाकथयत्तथा नटपतिस्स्वस्यापि तेष्वेकताम् ।
नित्यं तद्द्विजपूजयैव मुदितो यः प्रीणयत्याश्रितान्
सोऽयं सर्वपुमर्थदांघ्रिकमलः श्रेयांसि पुष्णातु नः ॥ ६

தம்முடைய சரண பூஜையிலேயே ஆசையுடையவர்களான தீக்ஷிதர்களோடு தம்மையே ஸமமாகவும், அவர்களோடு தம்மை ஒருவராகவும் கூறுகிற அந்த தீக்ஷிதர்களுடைய பூஜையினுலேயே சந்தோஷமடைந்து பக்தர்களைத் திருப்தி செய்கிற ஸகல புருஷார்த்தங்களையும் தருகிற திவ்ய சரண கமலமுடைய ஸ்ரீ நடராஜமூர்த்தி நமக்கு மங்களங்களை விருத்தி செய்யட்டும். ஸ்துதி கர்த்தா இந்த ச்லோகத்தினுல் சிதம்பர மாகாத்மியத்தில் உள்ள மூன்று ச்லோகார்த்தங்களை ப்ரகாசித்திருக்கிறுர்.

सुदक्षिणैर्महायज्ञैः तर्पयन्तस्सदा सुरान् ।
अकृत्रिमेण चित्तेन मम पूजां प्रकुर्वते ॥ 5—3

நல்ல தக்ஷிணைகள் பொருந்திய பெரிய யாகங்களால் எப்பொழுதும் தேவர்களை த்ருப்தி செய்விக்கின்ற தீக்ஷிதர்கள் நிர்மல மனஸ்ஸோடு என்னைப் பூஜிக்கின்றுர்கள்.

समोऽहमेक एवास्मि नास्त्यन्यो भुवनत्रये ॥ 5-25

அவர்களோடு நான் ஒருவனே ஸமமானவன். வேறு ஸமமுள்ளவர் மூன்று உலகத்திலும் கிடையாது.

शुद्धान्वयानामेतेषां ज्वलत्पावकरोचिषाम् ।
अहमेकः त्रिसाहस्रसंख्यासंख्याति पूरकः ॥ 24—83

சுத்த வம்சத்தில் ஜநித்த ஜ்வலிக்கின்ற அக்நி போன்ற ப்ரஹ்ம தேஜஸ்ஸையுடைய இந்தத் தில்லைவாழ் அந்தணர்களுள் ஒருவனான நான் மூவாயிர ஸங்க்யையைப் பூர்த்தி செய்கிறேன். ஸ்ரீ சித்ஸபேசருடைய ஆக்ஞையினால் ப்ரஹ்மதேவருடைய யாகத்துக்காகப் போயிருந்த மூவாயிர தீக்ஷிதர்களை அந்தர்வேதி என்கிற கங்காதீரத்திலிருந்து ஹிரண்ய வர்ம சக்ரவர்த்தி ரதங்களில் ஏற்றி சிதம்பர க்ஷேத்திரம் அழைத்துவந்து வியாக்ரபாத மஹரிஷியின் பொருட்டு எண்ணிக் காண்பிக்கும் ஸமயம் ஒன்று குறைய மிகக் கவலையடைந்தபொழுது ஸ்ரீ ஸபாநாதர் முக கமலத்திலிருந்து வந்த ச்லோகம் இது. இந்த இதிஹாஸத்தின் விரிவை சிதம்பர மாஹாத்மியம் 24-வது அத்யாயத்தில் காண்க.

चित्सभामध्यगन्तेजः चिन्तितार्थप्रदायकम् ।
चिदानन्दसदाकारं चिन्तयामो वयं सदा ॥ ७

சிற்றம்பலத்தின் நடுவில் விளங்கும் பக்தஜன மநோரதங்களைப் பரிபூர்த்தி செய்யும் ஸச்சிதானந்த மூர்த்தியை நாம் ஸதா த்யானம் செய்கிறோம்.

भद्रमद्रीन्द्रजाजानिस्तनोतु तनुचन्द्रभृत् ।
सर्वविद्यानिधिर्देवः प्रणवात्मा सभेश्वरः ॥ ८

பார்வதி பதியான சந்த்ர கலாதாரியான ஸர்வ வித்யாதிபரான ப்ரணவ ஸ்வரூபியான ஸபாநாயகர் மங்களங்களைக் கொடுக்கட்டும்.

यस्त्वत्यन्तवचः प्रमेयपरमप्रेमास्पदानन्दकृत्
प्रत्यक्तत्त्वमुपादिदेश गुरुराड्रूपो मुनिभ्यः प्रभुः ।
यस्तत्तत्त्वमनन्तहर्ष जनको नृत्येन चावेदय-
त्सुत्रामादि सुपर्वणो मुनिगणान् वन्दामहे तं मुहुः ॥ ९

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ரூபியாயிருந்து ஸநகாதி மஹ ரிஷிகளின் பொருட்டு வேதாந்த வாக்ய கம்யமான பர மானந்தகரமான அத்வைத தத்வத்தை உபதேசித்த ஆனந்த நடராஜ ரூபியாயிருந்து தாண்டவத்தினாலே இந்த்ராதி தேவர்கள் பொருட்டும் மஹர்ஷி கணங்கள் பொருட்டும் மேற்கூறிய தத்வார்த்தத்தை உபதேசித்த ப்ரபுவை அனேகந் தடவை நமஸ்கரிக்கின்றோம். இந்த சுலோகத்தின் பொருள் விரிவை ஸூதஸம்ஹிதை முக்தி கண்டம் 8-வது அத்தியாயத்தில் காண்க. இதன் ஸாரத்தை ஸ்ரீ காளிதாஸ மஹாகவி, மாளவிகாக்னி மித்ர நாடகத்தில் முதலங்கத்தில்

देवानामिदमामनन्ति मुनयः कान्तं क्रतुं चाक्षुषं
रुद्रेणेदमुमाकृतव्यतिकरे स्वाङ्गे विभक्तं द्विधा ।
त्रैगुण्योद्भवमत्र लोकचरितं नानारसं दृश्यते
नाट्यं भिन्नरुचेर्जनस्य बहुधाप्येकं समाराधनम् ॥

என்கிற பத்யத்தால் மிக ரஸமாகப் போதித்திருக் கிறார். பின் வரும் ஸமயம் இதை விரித்துரைப்போம்.

यस्मादेव जगद्भूत निखिलं येनैव संधार्यते
यस्मिन्नेव लयं प्रयाति निगमैर्गम्यश्च यस्सर्ववित् ।

यो वानन्दघनः स्वयं विजयते स्वानन्दयन्देहिनः
नृत्तेशं तमहं प्रणौमि गिरिजाप्राणेश्वरं सर्वदा ॥ १०

ஸகல ஜகத்துகளுக்கு ஸ்ருஷ்டி கர்த்தரும் ஸம்ரக்ஷகரும் ஸம்ஹார கர்த்தரும், வேதங்களால் அறியத் தகுந்தவரும், எல்லாமறிந்தவரும், ஆனந்த ரூபியும், ஸகல ப்ராணிகளேயும் ஆனந்திக்கச் செய்கிறவரும், பார்வதீ தேவியின் ப்ராணநாயகருமான நடநாயகரை எப்பொழுதும் நமஸ்கரிக்கின்றேன்.

எவரிடமிருந்து இந்த ப்ரபஞ்சம் உண்டாயிற்ரே ? எவரால் ஜீவிக்கிறதோ ? எவரிடம் லயிக்கிறதோ ? அந்த ஸ்வரூபத்தை அறிந்துகொள்ளு ! என்று ப்ரம்மத்தின் தடஸ்த லக்ஷணத்தையும், ஆனந்தமே ப்ரும்ம ஸ்வரூபம் என்று அறிய வேண்டுமென்று ப்ரும்மத்தின் ஸ்வரூப லக்ஷணத்தையும் தைத்திரீயோபநிஷதம் ப்ருகு வல்லியில் கூறுகின்றதன்ரே ! இங்கு அதையே நிரூபித்திருக்கிருர்.

यः क्रोधान्ध कृतान्तगर्वहरणप्रख्यापितेष्टापत-
त्कष्टापाकरणो विभाति जगती संरक्षणार्थं प्रभुः ।
रत्नाधार तुषार शैलसुकृतव्यूहोत्थदेवापगा-
गौरीशं तमहं व्रजामि शरणं श्रीचित्सभानायकम् ॥ ११

மிகக் கோபங்கொண்ட யமனுடைய கர்வத்தை அடக்கி மார்க்கண்டன் முதலான பக்தர்களுடையகஷ்டங்களே நிவர்த்தி செய்கிறவரும், ஜகத் ஸம்ரக்ஷண நிமித்தம் திவ்ய மங்கள மூர்த்தியாய் ப்ரகாசிக்கிறவரும், ஹிமவானுடைய பூர்வபுண்ய ஸமூஹத்தால் உண்டான கங்கா கௌரீ தேவிகளின் நாயகருமான திருச்சிற்றம்பல நாதனேச் சரணமடைகிறேன்.

संख्यातीत भवार्चिताघनिचयप्रध्वंसिपादेक्षणो-
द्युक्तानन्तसमस्तलोकजनताकैवल्यदित्सोद्भवम् ।
वाणीजानि मुखामरेन्द्रनिवहाशास्याशयावेदकं
नित्यानन्दरसावहं मुनटनं नश्शांभवं त्रायताम् ॥ १२

அநேக ஜன்மாக்களில் ஸம்பாதிக்கப்பட்ட பாப ஸமூகங்களை நாசம் செய்கிற திவ்ய சரண தர்சனத்தில் முயற்சியுடைய பக்த ஜனங்களுக்கு முக்தி யளிக்கும் நிமித்தம் உண்டானதாயும். பிரம்மதேவர் முதலான தேவ ஸமூஹத்தால் பிரார்த்திக்கத்தக்க ஞான விசேஷத்தைப் போதிக்கின்றதாயும் நித்யானந்த ரஸத்தைத் தருகிறதாயும் உள்ள சங்கரருடைய திவ்ய நடனமானது நம்மைக் காத்தருள வேண்டும்.

तव शिव महिमानं वेत्ति को वा जगत्यां
निखिलनिगमवाणीगूढमानन्दरूप ।
निहतदुरितजालैः आत्मकामैर्महत्वम्
नटवरकृपया ते बुध्यते सर्वरूप ॥ १३

ஓ! ஆனந்தரூபியான பரமசிவனே! ஸமஸ்த வேத சாஸ்த்ரங்களில் மறைந்திருக்கும் உன்னுடைய மஹிமையை எவனறிகிறான். ஸர்வாத்மகனான ஓ! நடனபதியே! உன்னுடைய கிருபையால் நாசஞ்செய்யப்பட்ட பாப ஸமூகத்தை உடையவர்களான ஆத்ம தர்சனத்தையே விரும்புகிற மஹர்ஷிகளால் உன்னுடைய பெருமை அறியப்படுகிறது.

स्वामिन् शब्दनये न चास्मि निपुणः तस्मात्स्तुतौ दोषभाक्
काव्यालंकृतिवृत्तबोधविकलः तन्मे वचो गर्हितम् ।
तय्यन्ते कुशलो नचास्मि तदहं तत्वं त्वदीयं परम्
जाने नापि जडः स्तवं तु कलयन्निन्द्योस्मि नाहं कथम् ॥१४

ஓ நாதனே! நான் வ்யாகரண சாஸ்த்ரத்தில் ஸமர்த்தனில்லாததால் ஸ்தோத்ரத்தில் பததோஷங்களை அடைவேன். காவ்யாலங்கார வ்ருத்த ஞானமில்லாததால் என்னுடைய ஸ்துதி வசனம் ரஸமில்லாமல் இருக்கும். வேதாந்த சாஸ்த்ரத்தில் நிபுணனில்லாததால் உம்முடைய உண்மை ஸ்வரூபத்தை அறியவில்லை. ஆதலால் உம்மை ஸ்தோத்ரம் செய்யும் மூடனான நான் ஏன் நிந்திக்கப்படமாட்டேன்?

नाथ त्वद्विषयप्रबन्धनिवहाः सन्त्यत्र सर्वार्थदाः
त्वद्भक्तेन्द्रविनिर्मितास्तव बुधव्यूहस्य चानन्ददाः ।
कर्तुं तादृशसन्नुतिं नटपते मन्दः कथं शक्नुयां
किन्त्वालंब्य कृपां तवाद्य विनुतिर्भक्त्येयमातन्यते ॥

ஓ நாத! பண்டித ஜனங்களுக்கு ஆமோதத்தைத் தருகிற அப்பைய தீக்ஷிதர்கள் முதலான மஹா பக்த சிகாமணிகளால் செய்யப்பட்ட உம்முடைய ஸ்தோத்ர கிரந்தங்கள் அனேகங்கள் அதிரஸவத்துக்களாக இருக்கின்றன. அவ்விதம் ஸ்தோத்ரம் செய்ய ஸமர்த்தனல்லாத மூடனான நான் உம்முடைய கிருபையை அவலம்பித்து பக்தியினால் மட்டும் ஸ்துதி செய்கிறேன். "स पूर्वेषामपि गुरुः कालेनानवच्छेदात् அந்தப் பரமசிவன் முன்னோர்களுக்கு குரு, கால அளவில்லாததால் என்கிற

பாதஞ்ஜல யோக சாஸ்த்ரப்படி ஆதிகுருவான சங்கர ருடைய பக்தியினுலேயே ஸகல சாஸ்த்ரார்த்தங்களை அறிந்தவனுகுவான். இவ்விதமே ச்வேதாச்வதர உபநிடதமும் கூறுகிறது. ஈசனிடத்திலும் குருவினிடத்திலும் எவனுக்கு உயர்ந்த பக்தி இருக்கிறதோ, அவனுக்குப் படித்த படியாத சாஸ்த்ரார்த்தங்கள் பிரகாசிக்கின்றன என்று இவ்வாறே அப்பய்ய தீக்ஷித சரணும் போதிக்கின்ருர்கள்.

नाहमधीती वेदे न च पठिती यत्रकुत्रचिच्छास्त्रे ।
किन्तु दरेन्दुवतंसिनि पुरहिंसिनि पुंसि भूयसी भक्तिः॥

நான் வேதமறியேன். யாதொரு சாஸ்த்ரமும் அறியேன். சந்திர சூடனை த்ரிபுர ஸம்ஹாரியான புருஷோத்தமனிடத்தில் பெரிய பக்திமட்டும் உள்ளவன் என்றும் ஆதலால் பக்திரூப ஸாதனத்தால் மட்டும் ஸ்துதி செய்கிறேன் என்று ஸ்துதிகர்த்தா நிரூபிக்கின்ருர்.

कद्रुद्र श्रुतितात्पर्यपरिज्ञानप्रचोदिता ॥
प्रवर्तते गतिः स्तोत्रे शक्तिहीनापि मे प्रभो ॥ १६

ஓ ப்ரபுவே! தைத்திரீய நாராயணேபநிஷத்திலுள்ள கத்ருத்ரச்ருதி தாத்பர்ய பர்யாலோசனையால் ஏவப்பட்ட என்னுடைய புத்தியானது ஸாமர்த்யமில்லாமல் இருந்தபோதிலும் உம்முடைய ஸ்தோத்ரத்தில் பிரவிருத்திக்கிறது. ச்ருதி தாத்பர்யமானது, ஸ்துதிக்கத் தகுந்தவரும் சிறந்த ஞானமுள்ளவரும் ஸகலாபீஷ்டங்களைத் தருகிறவரும் ஹ்ருதயத்தில் வஸிப்பவருமான ஈச்வரன் பொருட்டு ஸுகரமான ஸ்தோத்ரத்தைச் சொல்லுகிருேமென்று இதில் ஹ்ருதயத்தில் வஸிப்பவர் என்கின்ற விசேஷணத்தால் ஸகல பிராணிகளுடைய சரீரங்களில்

ஜீவரூபமாகப் பிரவேசித்து ஸர்வாந்தர்யாமியான பிரும்மஸ்வரூபம் என்கிற அத்வைத ச்ருதி தாத்பர்யமும் வெளியாகிறது. விராட் புருஷனுடைய ஹிருதய ரூபமான புண்டரீகமென்னும் சிதம்பர ஸ்ரீ சித்சபையில் திவ்ய நடனம் செய்யும் ஆனந்த நடேசஸ்வரூபமென்னும் கருத்துத் தோன்றுகிறது. சாந்தோக்ய ஜாபாலாதி உபநிஷத்துக்களுடையவும் ஸூத ஸம்ஹிதை சைவ ஏகாதச ருத்ர ஸம்ஹிதாதி புராணங்களுடையவும் தாத்பர்யமும் ப்ரகாசிக்கப்படுகிறது. இந்த ச்ருதியின் ஸாயண பாஷ்யத்தில் ஹ்ருதயத்தில் வஸிப்பதால் ஹ்ருதய ரூபம் என்று கூறப்பட்டிருக்கிறது. இதற்கு உபப்ரம்மணமாக ஸூதஸம்ஹிதை ஒன்பதாவது அத்தியாயத்தில்

सभारूपाय ते नित्यं सभायाः पतये नमः ।

नमश्शिवाय सांबाय ब्रह्मणे सर्वसाक्षिणे ॥

விராட் புருஷனுடைய ஹ்ருதய ரூபமான சிதம்பர சித்ஸபா ரூபியாயும். சித்ஸபைக்கு நாயகனுயும் ஸர்வாந்தர்யாமியாயும், சிவகாம ஸுந்தரீ ஸமேதருமான நடேசர் பொருட்டு நமஸ்காரம் என்று விசதமாய் இருக்கின்றது. சிதம்பர நடேச தர்சனமே தஹரவித்யோபாஸநமாகிறது என்னும் விஷயத்தைப் பின் விசதமாய்க் கூறுவோம்.

माध्यंदिनिर्व्याघ्रपदाभिरामो महर्षिवर्यो महयन्महेशम् ।

विलोक्य दिव्यं नटनं यदीयम् कृतार्थतामाप तमेव वन्दे

மத்தியந்தின மஹர்ஷியின் புத்திரரான வியாக்ரபாத மஹர்ஷியானவர் ஸ்ரீ மூலஸ்தான நாயகரைப் பூஜித்து, எந்த ஸபா நடேசருடைய திவ்ய நடனத்தைத் தர்சித்து ஜன்ம ஸ்ாபல்யத்தை அடைந்தாரோ, அந்த திவ்ய நடேசரையே நமஸ்கரிக்கிறேன்.

வ்யாக்ரபாத சரித்ர சங்க்ரஹம்.

மத்யந்தினமுநிவர் தம்முடைய குமாரருக்குச் சிவபுண்ணியங்களெல்லாவற்றுள்ளுஞ் சிறந்தது சிவலிங்க ஆராதனம் என்றும், சிவஸ்தலம் எல்லாவற்றிலும் சிறந்தது சிதம்பரம் என்றும் உபதேசித்தார். அது கேட்ட குமாரர், பிதாவினுடைய அனுமதி பெற்றுக்கொண்டு தெற்கு நோக்கிச் சென்று தில்லை வனத்தை அடைந்து அதன் உள்ளே சிவகங்கையென்னும் சிவதீர்த்தத்தையும் அதற்குத் தெற்கே ஒரு ஆலமர நிழலிலே ஸ்ரீ மூலஸ்தானேச்வரர் என்னும் சிவ லிங்கத்தையும் தரிசித்துத் தினந்தோறும் அத்தீர்த்தத்திலே ஸ்நாநம் செய்து ஸ்ரீ மூலஸ்தானேச்வரரைப் பூஜை செய்துகொண்டு வந்தார். சிலநாட்களான பின்பு மேற்கே ஒரு திருக்குளத்தைக் கண்டு அதற்கு மேற்கே ஒரு சிவலிங்கத்தை ஸ்தாபித்து அதற்கு ஸமீபத்திலே ஓர் பர்ணகசாலையில் இருந்துகொண்டு இரு சிவலிங்கங்களையும் பூஜை செய்துகொண்டிருந்தார். ஒருநாள் விடியுமுன் பனியிலே வழுக்காமல் மரங்களிலேறி புழு இல்லாத புஷ்பங்கள் எடுப்பதற்காக ஸ்ரீ மூலஸ்தான நாதருடைய அருளால் புலிக்கால் கைகளைப்போல் வலிமையுடைய கால்களையும் அதில் கண்களையுமடைந்து அன்று முதல் வ்யாக்ரபாதரென்னும் பெயருடையவராகி வேத விதிப்படி சிவபூஜை செய்துகொண்டு எண்ணில்லாத காலமிருந்தார். அப்பொழுது பிதாவாகிய மத்யந்தன முனிவர் வந்து வ்யாக்ரபாத முனிவரைக் கண்டு மகிழ்ந்தார். பிதாவின் உத்திரவுபடி வ்யாக்ரபாதர் வசிஷ்ட முனிவருடைய தங்கையாரை விவாகஞ் செய்துகொண்டு உபமன்யு என்னும் ஒரு சத்புத்திரரைப் பெற்ருர். உப்புத்திரரை வசிஷ்ட மஹர்ஷியின் மனைவியாகிய அருந்ததீ தேவி தம்முடைய ஆச்ரமத்துக்குக் கொண்டுபோய் காமதேனுவினது பாலை ஊட்டி வளர்க்கும் நாளிலே, வ்யாக்ரபாத முனிவர் தமது

பர்ணசாலையிலே அப்புத்திரரைக்கொண்டுவந்து கிழங்கு, பழம் முதலியவற்றையும், கரைத்த மாவையுங் கொடுக்க அவைகளை உட்கொள்ளாது காமதேனுவின்பாலை விரும்பி அழுகிற அப்புத்திரரை ஸ்ரீமூலஸ்தானேச்வரர் ஸந்நிதியிலே கொண்டுவிட அவர் பசிமிகுதியால் அழுது பரமேச்வரருடைய க்ருபையால் திருப்பாற் கடலைப் பெற்றுப் பருகி வளர்ந்தார். உபமன்யு முனிவர் இந்த க்ஷீரபான விசேஷத்தால், தான் ஸ்ரீகிருஷ்ண பகவானுக்கு சிவபாரம்யத்தை உபதேசித்தார். ஸ்ரீ கிருஷ்ண பகவானும் அர்ஜுனனுக்கு கீதைமூலமாக இவ்வுபதேச ஸாரத்தையே உபதேசித்தருளினர். ஒருநாள் வ்யாக்ரபாதமுனிவர் யோக மஹிமையால் தேவதாரு வனத்தில் நாற்பத்தெண்ணாயிர முனிவர்களுக்கு ஸ்ரீ நடேச பெருமான் திருநிருத்தஞ் செய்தருள் செய்ததை அறிந்து அதனை தரிசித்தருளும்படி ஸ்ரீ மூலஸ்தானேச்வரரை உபாஸித்து அம்மூர்த்தியின்கிருபையால் தைப்பூசம் வியாழக்கிழமையோடு கூடிய சித்தயோக தினத்து மத்யானத்திலே பதஞ்சலி முனிவரோடும் த்ரி ஸஹஸ்ர முனிவர்களோடும் பிரம்மன் முதலான தேவ ரிஷி கணங்களோடும் திவ்ய நிருத்த தர்சனஞ் செய்து ஜன்ம ஸாபல்யமடைந்தார். (இச்சரித்திரத்தின் விரிவை சிதம்பர மாஹாத்ம்யத்தில் காண்க.)

पतंजलिर्नृत्तदिदृक्षुरीशं अभ्यर्च्य दिव्यं नटनं च वीक्ष्य ।
यदीयढक्कोदितसूत्रभाष्यं चकार विद्याधिपमाश्रयेऽहम् ॥ १८

ந்ருத்த தர்சனஞ் செய்ய ஆசையுள்ள பதஞ்ஜலி முனிவர் ஸ்ரீ மூலநாதரைப் பூஜித்து திவ்ய நடனத்தைத் தர்சித்து யாதொரு நடேசருடைய டமருகத்திலிருந்து ஒலிவடிவாயுண்டான வ்யாகரண ஸூத்ரங்களுக்கு பாஷ்யஞ் செய்தாரோ! வித்யாதிபரான அந்த சிற்சபேசரை வணங்குகிறேன்.

பதஞ்ஜலி சரித்திர சங்க்ரஹம்.

ஒரு நாள் ஸ்ரீ நாராயணர் ஆதிசேஷ சயனத்தின் மீது செய்யும் நித்திரையைவிட்டெழுந்து சிவானந்தபரவசராய் இருக்கும்ஸமயம் ஆதிசேஷர் பாரந்தாங்காமல் திகைத்து அவரை வணங்கி ஒ! நாதனே! தாங்கள் அடியேன் மீது முன்போல் சயனித்து விழியாது இப்படி எழுந்தருளி இருந்தமை என்னே? என்று வினவ விஷ்ணு சொல்வாராயினர். ஆதிசேஷா! நேற்று சிவபெருமான் தாம் பிக்ஷாடன வடிவங்கொண்டு என்னை மோஹினி வடிவம் கொள்வித்து என்னோடு தேவதாரு வனத்துக்குச் சென்று பிக்ஷை ஏற்பாராயினர். அங்குள்ள முனிவர்கள் என்னைக் கண்டு மோஹிக்க அவர்களுடைய பத்னிகள் பிக்ஷாடனரைக் கண்டு மோகித்தார்கள். அதை அறிந்த முனிவர்கள் கோபங்கொண்டு ஆபிசாரஹோமம் செய்தார்கள். சிவபெருமான் அக்குண்டத்தக்னியினின்றும் தோன்றி வந்த புலியைப் பிடித்து தோலையுடுத்திக்கொண்டார். பின்பு வந்த பூதங்களை அடிமைகளாக்கிக்கொண்டார். பின்பு வந்த ஸர்ப்பத்தை ஆபரணமாக அணிந்து கொண்டார். பின்பு வந்த முயலகனை முதுகுநெறியும்படி வலப்பாதத்தினாலே மிதித்துக்கொண்டார். பின்பு வந்த அக்நியை திருகரத்திலேந்திக்கொண்டார். பின்பு வந்த மந்திரங்களை திருவடியிலே திருச்சிலம்புகளாகச் சாத்திக் கொண்டார், பின்பு அம்முனிவர்களை அனுக்ரஹிக்க சிவபெருமான் ஆனந்த ந்ருத்தஞ்செய்தருளினர். அந்த ந்ருத்தானந்தத்தினாலே நித்திரையை ஒழித்தேன் என்றார். இவ்வார்த்தையை ஆதிசேஷர் கேட்டு நிருத்த தர்சனத்தில் பேராசை உடையவராய் அனுமதிபெற்றுக்கொண்டு திருக்கைலாயமலையை அடைந்து பலகாலம் தவம் செய்தார். பரமேச்வரர் பிரத்யக்ஷமாகி அன்பனே! சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோதானம் அநுக்ரஹம் ஆகிய பஞ்ச க்ருத்யமே நமது நிருத்தமாகும். நான் தேவதாரு வனத்திலே

நிருத்த ப்ரஸ்தாவனுமாத்ரஞ் செய்தபொழுது அவ்வனம் அதனைப் பொருக்கமாட்டாதசைந்தது, நமது நிருத்தத்தை பொருக்கவல்லது தில்லைவனம். அந்த ஸ்தலத்திலே ஸ்ரீ மூல லிங்கம் இருக்கின்றது அதற்கு தெற்கே ஒரு ஸபையுண்டு. அங்கே நாம் எக்காலமும் நிருத்தம் செய்தருள்வோம். புண்யவான்களான த்ரி ஸஹஸ்ர முனிவர்கள் வேதங்களால் ஸ்துதிக்கத்தகுந்த அச்சபையையும், நிருத்தத்தையும் தரிசிக்கிருர்கள். புண்யபாகம் இல்லாதவர்களுக்குத்தோன்ருது. நீ அங்கே இவ்வடிவத்தோடு போவாயாயின் உலகம் பயப்படும். நெடுங்காலத்துக்கு முன் அத்ரிமுனிவனும் அவன் பத்னியாகிய அனஸூயையும் உன்னைப் பிள்ளையாகப்பெற விரும்பி தவஞ்செய்தார்கள். அவ்வனஸூயை ஸ்நாநம் செய்து கரையேறிய பொழுது நீ அவளுடைய அஞ்சலியிலே ஐந்து தலை பொருந்திய ஒரு சிறு பாம்பாய் பொருந்த அவள் பயத்திஞலே கைவிட நீ வீழ்ந்து பதஞ்கலி என்னும் பெயர் பெற்ருய். இப்பொழுது நீ அவ்வடிவமும், அப்பெயருங்கொண்டு நாக லோகத்துக்குப் போ. அங்கே ஓர் பர்வதமும் ஒரு பிலத்வாரமுமுள்ளன. அப்பிலத்வாரத்தின் முடிவு தில்லைவனம். ஓராலமர நிழலிலே அப்பருவதத்தின் கொழுந்து மூலலிங்கமாயிருக்கும். வியாக்ரபாத முனிவன் நமது நிருத்தத்தைத் தரிசிக்க விரும்பி, அந்த லிங்கத்தை பூஜை செய்து கொண்டிருக்கின்ருன். நீயும் போய் அவனேடு இரு.

குருவாரத்தோடும் சித்தயோகத்தோடும் கூடிய தை மாத பூசதினத்து மத்யானத்திலே ஆனந்த நிருத்தங் காட்டியருளுவோம். அதை நீ தரிசித்து ஶப்த சாஸ்த்ரத்துக்கு பாஷ்யஞ் செய் என்றருள் செய்தார். அப்படியே பதஞ்ஜலி முனிவர் தில்லைவனம் வந்து ஸ்ரீ வ்யாக்ரபாத முனிவரோடு ஸ்ரீ மூலஸ்தானநாதரைப் பூஜை செய்து கொண்டும் தில்லை வனத்தின் மேல் புறத்தில் ஒரு

திருக்குளத்தைக்கண்டு அதன் கீழ்க்கரையிலே ஒரு சிவலிங்கம் ஸ்தாபித்து பூஜைசெய்து கொண்டும் திருக்குளத்தின் வடபாகத்திலே பர்ணசாலை செய்து அதிலிருந்தார். பின் சிவபெருமானால் குறிக்கப்பட்ட தைப்பூசதினத்தில் ஸ்ரீ சிற்சபேசருடைய ஆனந்த ந்ருத்ததர்சனம்செய்து இந்த ஞான ஸபையிலே இன்று முதல் எக்காலமும் ஸகல ப்ராணிகளுக்கும் ஆனந்த நிருத்தத்தைக் காண்பித்தருளும் என்று பிரார்த்திக்க, சிவபெருமானும் அங்கிகரித்தருளினர். பின் வ்யாகரண மஹா பாஷ்யத்தையும் சிற்சபேசருடைய உத்ஸவ நித்யநைமித்திக பூஜா விதி ஸூத்ரங்களையும், யோகஸூத்ரங்களையும் வைத்ய சாஸ்த்ரவார்த்திகங்களையும் செய்து அனேகமஹர்ஷிகளுக்கு அத்யாபனம் செய்து கொண்டும் ஆனந்த ந்ருத்தஞ்செய்துகொண்டும் பரமானந்த பரிதராய் இருந்தார். (இச்சரித்திரத்தின் விரிவை சிதம்பர மஹாத்மியத்திலும் ராமபத்ர தீக்ஷித க்ருத பதஞ்சலி சரித காவ்யத்திலும் காண்க).

पार्श्वद्वये कुसुमनिग्वदलैर्यदीयं मञ्जीरशिंजितमनोहरमंघ्रिपद्मम् ।
श्रौताध्वनैव विधिवन्मखिनोमहान्तः संपूजयन्ति तमहं शरणं-
प्रपद्ये ॥ १९

எந்த சிற்சபேசருடைய திவ்ய சரண கமலத்தை இரண்டு பக்கங்களிலும் பண்டிதோத்தமர்களான தீக்ஷிதர்கள் வேத விதிப்படியே மல்லிகாதி புஷ்பங்களாலும் பில்வதளங்களாலும் பூஜிக்கின்ருர்களோ, அந்த திவ்ய நடேசரை நமஸ்கரிக்கின்றேன்.

प्राप्तस्त्वत्कृपया जनिं जनिमतां वैयाघ्रपुर्यां प्रभो
नाथ त्वत्कृपयैव तावकपदद्वन्द्वार्चनार्होऽभवम् ।

नाथ त्वत्कृपया त्वदंघ्रिकमले भक्तिः शिवा मेऽभवत्
नाथ त्वत्कृपया त्वदीयविनुतिं कर्तुंमतिश्चाजनि ॥ २०

ப்ரபோ ப்ராணிகளுக்குள் நான் உம்முடைய கிருபையால் வ்யாக்ர புரத்தில் ஜநித்து உம்முடைய கிருபையினலேயே உம்முடைய சரண கமலங்களைப் பூஜிப்பதற்கு யோக்யனுகவுமானேன். ஒ! நாத! உம்முடைய கிருபையால் உம்முடைய சரண கமலத்தில் மங்கள காரியான பக்தியும் எனக்குண்டாயிற்று. ஒ, நாத! உம்முடைய கிருபையால் உம்மை ஸ்தோத்ரஞ் செய்ய புத்தியும் உண்டாயிற்று.

गीर्वाणाः कति वा न सन्ति भुवने भक्तेष्टसन्दायकाः
नाहं तत्पदसेवनं न च फलं तस्येश मन्ये विभो ।
यस्मात्तेपि तवांघ्रिमेव विबुधाः कैवल्यसौख्यप्रदं
बुध्वा भक्तिसमन्विताः प्रतिदिनं पश्यन्ति पादांबुजम् ॥ २१

ஒ நடேச ப்ரபோ! உம்முடைய சரணமே மோக்ஷ ஸுகமளிப்பதென்றறிந்து ஸ்ரீமந் நாராயணன் முதலான தேவர்களும் தினந்தோறும் உம்முடைய திவ்ய குஞ்சித சரணத்தையே தர்சிக்கின்றுர்கள். ஆதலால் பக்த ஜனங்களுக்கு ஸ்வர்காதி விஷய ஸுகங்களை அளிக்கும் தேவர்கள் உலகில் பலர்களிருந்தும் அவர்களை நான் பஜிக்கவில்லை. அவர்கள் அளிக்கும் பலத்தையும் விரும்பேன்.

" अविद्यास्तमयो मोक्षः सा च बंध उदाहृतः "

புத்ர மித்ராதி ஸம்ஸார பந்த ரூபமான அஞ்ஞான நாசமே மோக்ஷ ரூபமாகையால் ज्ञानादेव तु कैवल्यं ஞானத்தினல்தான் மோக்ஷமேற்படும் ஆகையால் ईश्वरात्

ज्ञानमन्विच्छेत् அந்த ஞானத்தையும் ஈஶ்வரரிடமிருந்தே விரும்ப வேண்டுமாகையால் திவ்ய நடேச குஞ்சித சரணத்தையே முமுக்ஷுக்கள் பஜிக்கின்றனர்கள். இவ்வாறே சிதம்பர மாஹாத்மியமும் போதிக்கின்றது.

देवाच्छ्रेष्ठतमस्तस्य श्रीमान् ताण्डवभूषितः

भवांभोधिमहापोतः पादः पद्मारुणच्छविः ।

तस्य दर्शनमात्रेण सकृत्पापी च मुच्यते

किंपुनस्सुकृती क्षेत्रवासी नित्यनिरीक्षकः ॥ (अध्याय) 24

ஸம்ஸார ஸமுத்ரத்திற்குத் தோணி போலிருக்கிறதும் செந்தாமரைபோல் சிவந்த காந்தி பொருந்தியதும் தாண்டவத்தால் அலங்கரிக்கப்பட்டதும் ஸமஸ்த மங்களங்களோடு கூடியதுமான ஸ்ரீ நடேசருடைய குஞ்சித சரணமானது ஸ்ரீ நடேசமூர்த்தியைக் காட்டிலும் ச்ரேஷ்டமானது. அதனுடைய ஒருதடவை தர்சன மாத்ரத்தால் மஹா பாபியும் மோக்ஷமடைகிறன். நித்யந்தர்சிக்கிற சிதம்பரக்ஷேத்ர வாஸியான புண்ய புருஷன் முக்தனென்பது கைமுதிக ந்யாய ஸித்தம். இவ்வாறே ஸ்ரீ அப்பைய திக்ஷித சரணரும் நிர்யாண சமயத்தில் சிதம்பர க்ஷேத்ரத்தில் கூறுகின்றனர்கள்.

चिदम्बरमिदं पुरं प्रथितमेव पुण्यस्थलं

सुताश्चविनयोज्वलाः सुकृतयश्च काश्चित्कृताः ।

वयांसि मम सप्ततेरुपरि नैव भोगे स्पृहा

न किञ्चिदहमर्थये शिवपदं दिदृक्षेपरम् ॥

आभाति हाटकसभानटपादपद्मज्योतिर्मयो मनसि मे
तरुणारुणोयम् ॥

இந்தச் சிதம்பரக்ஷேத்ரமானது ச்ருதி ஸ்ம்ருதி புராண இதிஹாஸங்களினுல் மிகப் பிரஸித்தி பெற்றது. விநய ஸம்பந்நர்களான புத்ரர்களுமிருக்கின்ருர்கள். அவசியம் அனுஷ்டிக்கவேண்டிய அக்நி ஹோத்ராதி கர்மாக்களும் அனுஷ்டிக்கப்பட்டன. வயதும் 70 க்குமேல் ஆயின. ஆதலால் வேறு யாதொருபோகத்தையும் விரும்பவில்லை. சிவ குஞ்சித சரணத்தையே தர்சிக்க விரும்புகிறேன். கனக சபையில் பிரகாசிக்கின்ற நடராஜருடைய குஞ்சித சரண கமல ஜ்யோதிர் மயமான ஸூர்யன் என்னுடைய மனதில் பிரகாசிக்கின்றது என்று கூறி குஞ்சித சரணத்தில் ஐக்யமானுர்கள்.

नूनं जरामरणघोरपिशाचकीर्णा संसारमोहरजनी विरतिंप्रयाता ॥

ஜராமரண ரூபமான பயங்கர பிசாசங்களால் வியாபிக்கப்பட்ட ஸம்ஸாரரூப அஞ்ஞானமாகிற இரவு முடிந்தது நிச்சயம் என்று தீக்ஷித புத்ரர்கள் ச்லோக பூர்த்திசெய்தார்கள். ஆதலினுல் சிவ குஞ்சிதசரண தர்சனம் முக்தியளிக்குமென்பது ஸித்தம். இவ்வாறே நீலகண்ட தீக்ஷிதர்களும் ஸ்துதிக்கின்ருர்கள்.

दृष्ट्वा कौस्तुभमप्सरोगणमपि प्रक्रान्तवादा मिथो
गीर्वाणाः कति वा न सन्ति भुवने भारादिवः केवलम् ।
निष्क्रान्ते गरले द्रुते सुरगणे निश्चेष्टिते विष्टपे
माभैष्टेति गिराऽविरास धुरि यो देवस्तमेव स्तुमः ॥

அமிர்த மதன ஸமயத்தில் பாற்கடலிலிருந்து உண்டான கௌஸ்துப மணியையும் அப்ஸரஸ் ஸ்த்ரீ கூட்டத்தையும் பார்த்து ஆசைகொண்டு எனக்கு எனக்கு என்று கலஹஞ் செய்கின்ற ஸ்வர்க்க லோகத்துக்கு பார பூதர்களான விஷ்ணு முதலான பல தேவர்களிருந்தும் அச்சமயமே காள கூட விஷமுண்டானபோது ஸகல தேவர்களும் பயந்து ஓட ஸகல ஜகத்துக்களும் பயத்தினுல் வியாபாரமும் இல்லாமலிருக்க பயப்படாதீர்களென்று திவ்ய வசனுமிர்தத்தால் காப்பாற்றி யருள் செய்த பரமேஶ்வரரையே ஸ்துதி செய்கிருேம், என்று

पश्वादिभिश्चाविशेषात् பிரியமான புற்களைக் கண்டு விரும்பி ஓடி வருகிறதுகளும் பயங்கரமான தண்டத்தைக் கண்டு பயந்து ஓடிப்போகிறதுகளுமான பசுக்களுக்கு ஒப்பானவர்களே தத்வஜ்ஞானமில்லாத ஸகல பண்டிதர்களும் என்று ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாள் அத்யாஸ பாஷ்யத்தில் கூறியபடி தேவர்களெல்லாம் பசு துல்யர்களென்றும் ஆகையினுலே ஈச்வரனுக்கு பசுபதி என்னும் நாமமமைந்திருக்கிறதென்றும் ஆதலினுல் உமாபதியான நீலகண்டனுன நடபதியான பரமேஶ்வரன் தான் ஸ்துத்யர்ஹர் என்று ஸ்துதிகர்த்தா நிரூபிக்கின்ருர். இவ்வாறே ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாளும் சிவானந்த லஹரியால் ஸ்துதிக்கின்ருர்கள்.

सहस्रं वर्तन्ते जगति विबुधाः क्षुद्रफलदाः

न मन्ये स्वप्ने वा तदनुसरणं तत्कृतफलम् ।

हरिब्रह्मादीनामपि निकटभाजामसुलभं

चिरं याचे शंभो शिव तव पदांभोज भजनम् ॥

ஓ! மங்களத்தைத் தருகின்ற பரமசிவனே! உலகில் அற்பப் பலனைத் தருகின்ற தேவர்கள் அனேகர்கள் இருந்தும் அவர்களை ஸேவிப்பதையும் அவர்களால் கொடுத்திருந்த பலத்தையும் ஸ்வப்னத்திலும் நினைக்க வில்லை. ஸமீபத்தில் வஸிக்கின்ற பிரும்மா, விஷ்ணு முதலானவர்களுக்கும் கிடைக்கத்தகாத உம்முடைய திவ்ய பஜனத்தை யாசிக்கின்றேன்!! இது முதலான பல மஹான்களுடைய ஸ்துதிகளாலும் புராண இதிஹாஸ சாஸ்த்ர பர்யாலோசனையாலும் ஸ்ரீமந் நடராஜ திவ்ய சரண பஜநமே முக்திப்ரதமென்று இந்த ஸ்ரீ நடேசஸ்துதி கர்த்தரான ஸ்ரீ ராமலிங்க யஜ்வாவும் நிரூபிக்கின்றார்.

नाहं पूजयितुं त्वदीय चरणांभोजं च संवीक्षितुं
ध्यातुं वा विधिवन्नवेद्मि न दृढा भक्तिश्चमेविद्यते ।
किं कुर्यां करुणानिधे ममनस्तारल्ययुक्तं विभो
दीनोऽहं भवरोगदूनहृदयः त्वत्पादपद्मं भजे ॥ २२

வியாக்ரபாதர் முதலான மஹர்ஷிகளைப் போல், சாஸ்த்ர விதிப்படி உம்மைப் பூஜிப்பதற்கும் தர்சிப்பதற்கும் தியானஞ் செய்வதற்கும் அறிவில்லாதவன், கண்ணப்பன் முதலான பக்த மணிகளைப்போல் த்ருடமான பக்தியுமில்லாதவன் ஓ! கருணா நிதியே! என்னுடைய மனம் மிகவும் சஞ்சலமாயிருக்கின்றது. என்ன செய்வேன். சம்சார ரோகத்தால் மிகக் கவலைப்படுகிற நான் உம்முடைய சரண கமலத்தையே பஜிக்கின்றேன்.

बालोऽहं भगवन् न मेऽस्ति भुवने त्राता भवन्तं विना
त्वं माता जनकस्त्वमेव करुणासिन्धोसि संरक्षकः ।

भक्तोऽहं तव सन्निधावनुदिनं त्वत्कुञ्चितांघ्रिमुहुः

पश्यामीश सभापते सकरुणं मां पाहि संसारतः ॥ २३ ॥

ஓ நாதனே! நான் ஸம்ஸார தாரணஞ் செய்யும் ஸாமர்த்திய மில்லாதவன், எனக்கு உம்மைத் தவிர ரக்ஷிப் பவனில்லை. ஓ கருணைக் கடலே நீயே தாய். நீயே தந்தை சிக்ஷிக்கிற குருவும் அரசனும் நீயே. உம்முடைய தாஸ னான நான் தினந்தோறும் உம்முடைய குஞ்சித சரண கமலத்தை தர்சிக்கின்றேன். ஓ ஸபாநாதனே! துக்கமய மான இச் சம்ஸாரத்திலிருந்து கருணையுடன் காத்தருள் செய். "நீ ஸ்த்ரீ, நீ புருஷன், நீ பிள்ளை, நீ பெண், தண் டத்தோடு நடக்கிற கிழவனும் நீ. குழந்தையும் நீ. நீ ஸர் வாத்மகன்" என்று ஶ்வேதாஶ்வதரோபநிடதம் கூறுகிற தன்றோ!

संसाराख्यमहावनेऽतिविपुले संवर्धमानेऽन्वहं

भ्रान्तोमोहवशात् सभेश शरणं त्वामेव यामि प्रभो ।

यस्मात्फालविलोचनाग्निशिखया दग्धुं समर्थोभवान्

संसाराख्यमहाटवीं पुररिपो दीनावनाग्रेसर ॥ २४ ॥

ஓ! ஸபாநாயக!! ஸம்ஸாரமாகிற மிக விசால மான ஓர் பெரிய அரண்யம் நாள்தோறும் மிக வ்ருத்தி யடைகிறது. நெற்றிக் கண்ணால் திருபுர மஹாராக்ஷஸர் களை ஸம்ஹரித்த தீன ரக்ஷக சிகாமணியே! நீ நெற்றி நெருப்புக் கண் ஜ்வாலையால் ஸம்ஸாரண்யத்தை பொசுக் குவதற்குச் சமர்த்தனாகிறாய். ஆதலினால் ஸம்ஸார துக் கத்திலிருந்து நீயே ரக்ஷிக்கவேணும்.

दीनानामभयप्रदोऽसि भगवन् दक्षोसि भक्तावने
संसारार्तिनिवारकोऽसि करुणारूपोसि यस्मात्प्रभो ।
तस्माद्दीनतमं भवाब्धिपतितं त्वद्भक्तिमन्तं जनं
श्रीमद्धेमसभापते सकरुणं संसारमुक्तं कुरु ॥ २५ ॥

துக்கமடைந்த மார்க்கண்டன் முதலானவர்களுக்கு மிருத்யு பயத்தை நிவர்த்திசெய்து அபயமளித்தவர் நீரே. திருநீலகண்டர் முதலான பக்தர்களை ரக்ஷித்தவர் நீரே. மணிவாசகர், நந்தன் முதலியவர்களுக்கு ஸம்ஸார நிவர்த்தி செய்து முக்தி அளித்தவர் நீரே.

ஆதலால் மிகக் கருணையுள்ளவர் நீரே. ஸ்ரீ கநக ஸபா நாதனே! துக்கித்தவனும் ஸம்ஸார ஸமுத்ரத்தில் மூழ்கியவனும் உமது பக்திவந்தனுமான என்னை ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டவனாகச் செய்து அருள் புரிய வேண்டும்,

भक्त्या ये तव सन्निधावनुदिनं पश्यन्ति पादाम्बुजम्
भक्ता भस्मविभूषिता भवभयं भेत्तुं भवन्तं गताः ।
तेषामीप्सित दायकोसि भगवन् भक्तोस्मि चाहं प्रभो
तस्मान्मां परिपालय त्वमधुना देहीश मद्वाञ्छितम् ॥ २६ ॥

விபூதியினால் அலங்கரிக்கப்பட்ட சரீரங்களையுடைய எந்த பக்தர்கள் ஸம்ஸார பயத்தை நாசம் செய்வதற்கு உம்முடைய ஸந்நிதியில் உம்மை சரணாகதியடைந்து

உம்முடைய சரணகமலத்தை தினந்தோறும் தர்சிக்கின்ருர்களோ, அவர்களுடைய மனோரதத்தைப் பூர்த்தி செய்கின்றீர். ஓ ப்ரபோ! நானும் பக்தனுகையால் என்னைக் காப்பாற்றும். என்னுடைய இஷ்டத்தைக் கொடும்.

स्वामिन् यत्तव ताण्डवं मुनिवरः श्रीशौनकः पुण्यभाक्

दृष्टा ऋग्भिरमन्दहर्षसहितः स्तुत्वा भवन्तं प्रभो ।

व

संप्राप्ताधिपतित्वमीश भवतः श्रीबह्वृचानां वरात्

शाखासूत्र निबन्धकर्तृत्वमगमत्तन्मेऽद्य संदर्शय ॥ २७ ॥

ஓ நாதனே! புண்யசாலியான ஸ்ரீ சௌனக மஹர்ஷியானவர் எந்த உம்முடைய தாண்டவத்தைத் தர்சித்து பரமானந்த சகிதராய்க்கொண்டு வேதங்களால் உம்மை ஸ்துதி செய்து உம்முடைய கிருபையால் ருக் சாகிகளுக்கு நாயகனுயிருப்பதையும் ருக் சாகா ஸூத்ர கர்தராயிருப்பதையும் அடைந்தாரோ அந்தத் தாண்டவத்தை, இப்பொழுது எனக்குக் காண்பித்தருள்செய்யும். ஒரு ஸமயம் ப்ருகு வம்சத் திலகரான சௌனக மஹர்ஷியானவர் சிவ பக்த சிரோமணியான நந்திகேச்வரரை நமஸ்கரித்து பரமேச்வரன் பார்வதி தேவியோடு உலகத்தின் உபகாரத்தின் பொருட்டு மூன்று சந்திகளிலும் நர்த்தனம் செய்வதாக வேத சாஸ்திரங்களில் பிரசித்திப்பெற்றதே. அந்த நர்த்தனம் தேவலோகத்திலா? பூமியிலா? பர்வதத்திலா? ஜலத்திலா? வனத்திலா? ஸ்மசானத்திலா? ஸூர்ய மண்டலத்திலா? சந்த்ர பிம்பத்திலா? என்று வினவ நந்திகேச்வரர் மிகுந்த ஸந்தோஷத்துடன் பதில் கூறுவாராயினர். பரமசிவன் உமாதேவியார் ஒருவர் மட்டும்

தர்சிக்கும்படி கைலாஸத்தில் எப்பொழுதும் நர்த்தனம் செய்கின்ருர். சிதம்பரத்தில் ஸ்ரீ சித் ஸபையில் எப் பொழுதும் எல்லோருங்காண ஆனந்த நர்த்தனம் செய் கின்ருர். உனக்குத் தாண்டவ தர்சனத்தில் விருப்பமிருந் தால் சிதம்பரத்துக்குப் போகவேண்டும். அவ்விடத்தில் தாண்டவ தர்சனம் செய்து நேத்திர ஸாபல்யமடைவா யாக என்றவுடனே சௌனக முனிவர் சிதம்பரம் வந்து சிவகங்கையில் ஸ்நானம் செய்து ஆனந்தத் தாண்டவத்தை தர்சித்து வேதங்களால் ஸ்துதிசெய்து அவருடைய வரத்தி ஞல் ருக் சாகிகளுக்கு அதிபராகி ருக் சாகா ஸூத்ர கர்த்தாவாகவுமாகி வெகுகாலம் சாஸ்திர விசாரஞ்செய்து கொண்டிருந்தார் என்கிற இச் சரித்திரத்தை சிதம்பர மகாத்மியம் 24-வது அத்தியாயத்தில் காண்க.

शंभो यां करुणामवाप्य भगवन् सिंहस्वरूपान्वितः

लेखेन्द्राख्य नृपात्मजोऽघशमने स्नात्वाथगं गांभसि ।

लब्ध्वा स्वर्णमयं शरीरममलं नृत्तंच वीक्ष्यादरात्

सम्मोदं समवाप शाश्वतमसावस्मिन् कृपां तां कुरु ॥ २८ ॥

ஓ சம்போ! ஓ பகவன்! குஷ்ட சரீரத்துடன் கூடிய லேகேந்திர மகாராஜாவின் குமாரன் எந்த உம்முடைய கிருபையை அடைந்து பாப நிவர்த்தியின் பொருட்டு சிவ கங்கா தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து நிர்மலமான ஸ்வர்ண மயமான சரீரத்தை அடைந்து பக்தியோடு உம்முடைய திவ்ய தாண்டவத்தைத் தரிசித்து நித்யானந்த ஸ்வரூப மான மோக்ஷத்தை அடைந்தானே அந்த கிருபையை இந்த என்னிடத்திலும் கொடுத்தருளும்.

ஹிரண்ய வர்ம சரித்ர சங்க்ரஹம்.

இமயமலைக்குத் தெற்கேயுள்ள கௌட தேசத்தில் ஐந்தாவது மனுவான லேகேந்த்ர மகாராஜனுக்கு மூத்தாளிடத்தில் ஸிம்மம்போல் வெள்ளை நிறமுடைய ஸிம்ம வர்மன் என்று ஒரு குமாரனும், இளையாளிடத்தில் வேத வர்மன், ஸுமதி வர்மன் என்று இரண்டு குமாரர்களும் பிறந்தனர். ஸிம்ம வர்மன் சரீர ரோகத்தால் ராஜ்ய பரிபாலனத்துக்கு யோக்யமல்லாதவனென்று எண்ணி தந்தையாருக்கு விண்ணபப்பஞ் செய்துகொண்டு காசி, வங்கதேசம், சாவக தேசம், ஓஷ்ட்ரதேசம், ஸ்ரீசைலம் ஸ்ரீகாளஹஸ்தி முதலான க்ஷேத்ரங்களை தரிசித்து ஒரு வேடனுடைய ஸகாயத்தால் காஞ்சி க்ஷேத்ரமடைந்து சில காலமவ்விடமிருந்து தரிசித்து, பின்பு அவ்வேடன் வழிகாட்டச் சென்று தில்லை வனத்தை அடைந்து சிவகங்கைக் கரையிலே யோக நிஷ்டையிலிருக்கும் ஸ்ரீ வியாக்ரபாத முனிவர் முன் சென்று நமஸ்கரித்து நின்றான். முனிவர் யோகத்தினால் அரசனுடைய வரலாறனைத்தையும் தெரிந்து ஸ்ரீ நடேசப்பெருமான் கருணை செய்தாராயின் சிதம்பர ஆலயத் திருப்பணிக்கு இவன் ஆளாவான் என்றெண்ணி நாம் வரும்வரை இங்கே நில் என்று ஸிம்ம வர்மனைக் கரையில் நிறுத்திவிட்டு பதஞ்ஜலி முனிவருடன் கனக ஸபையின் வாயிலிலே நின்று நிருத்த தரிசன காலம் வர உள்ளே புகுந்து நமஸ்கரித்து கௌடேச குமாரன் இங்கே வந்து நிற்கின்றான். அவனுக்கு சரீர ரோகத்தை நீக்கி தாண்டவத்தைத் தரிசிக்கச் செய்து அவனை அடிமை கொண்டருளுக என்று சிற்சபேசரிடம் விஞ்ஞாபித்தார். சபேசருடைய உத்திரவால் ஒரு பன்றி முழுகி பொன் வடிவத்துடன் எழுந்ததைப் பார்த்து ஆச்சர்யம் கொண்ட ஸிம்ம வர்மனை சிவகங்கையில் ஸ்நானம் செய்வித்து பொன்வடிவம் ஏற்பட்டதால்

ஹிரண்ய வர்மன் என்று நாமகரணம் செய்து பஞ்சாக்ஷ ரத்தை உபதேசித்து சபேசருடைய சந்நிதியில் அழைத்து வர நடேசரும் தாண்டவத்தைக் காட்டி இரண்யவர்மனே நீ நமக்கும் இம்முனிவர்களுக்கும் மூவாயிர முனிவர்களுக் கும் தொண்டு செய்வாயாக என்று அருள் செய்தார். பின்பு ஸ்ரீ மூலஸ்தானேஸ்வரரையும் திருப்புலீச்வரரை யும் ஸ்ரீ அனந்தேச்வரரையும் தர்சிக்கச் செய்து தமது பர்ணசாலையை யடைந்து பத்நியிடம் நீ உபமன்யுவுக் குப் பின்பு பெருது பெற்ற பிள்ளை இப்பிள்ளை என்று முனிவர் சொல்ல பத்நியும் தமது குழந்தைபோல் பாவித்து வந்தாள். ஹிரண்ய வர்மன் சிவகங்கையில் ஸ்நாநஞ் செய்து நடேசரைத் தரிசித்து முனிவர்களுக்கு சுச்ருஷை செய்து வரும் நாளில் கௌடேசராகிய மனு தமது ராஜ்யத்தைத் தம்முடைய மூத்த குமாரனாகிய ஸிம்ம வர்மனைக் கொண்டு நடத்திவிக்கும் பொருட்டு குல குருவாகிய வசிஷ்ட முனிவருக்கு விண்ணப்பஞ் செய்து ஸ்வர்க்கத்தை அடைந்தனர். வசிஷ்ட முனிவர் இளைய குமாரர்களைக் கொண்டு கிரியைகளனைத்தையும் நடத்தி வைத்த பின் தில்லை வனத்துக்கு வந்து சிற்சபேசரைத் தர்சித்து வியாக்ரபாத பதஞ்சலி முனிவர்களிடம் கௌடேச மனுவின் வேண்டுகோளின்படி ஹிரண்ய வர்மனை அழைத்துக்கொண்டு போவதற்கே வந்தேன் என்று சொல்ல உடனே ஹிரண்ய வர்மன் சிற்சபேசருக் கும் முனிவர்களுக்கும் செய்யும் வழிபாட்டையே யன்றிப் பிறிதொன்றையும் விரும்பேன்என்று சொல்ல வியாக்ர பாத முனிவர் உன் கருத்து இதுவாயின் நீ உன் தேசஞ் சென்று ராஜ கிரீடத்தையும்இரத்தினம் பொன் முதலிய திரவியங்களையும் சதுரங்க சேனைகளையும் மந்த்ரிமார்களை யும் சீக்கிரம் அழைத்து வருவாயாக என்றார்.

ஹிரண்யவர்ம சரித்ர ஸங்க்ரஹம்.

வியாக்ரபாத முனிவர் ஹிரண்ய வர்மனிடம் வரும் பொழுது அந்தர்வேதியில் போயிருக்கின்ற திரிஸஹஸ்ர முனிவர்களையும் அழைத்துக்கொண்டுவா என்று பணித்தருளினர். ஹிரண்ய வர்மன் சிற்சபேசரிடமும் முனிவர்களிடமும் விடைபெற்றுத் தன்னுடைய தேசஞ் சென்று சில நாள் அங்கிருந்து திரவியங்களோடும் ஸேனைகளோடும் புறப்பட்டு அந்தர்வேதியிலிருந்து திரிஸஹஸ்ர முனிவர்களையும் தேர்களின் மேலேற்றிக் கொண்டு அழைத்துத் தில்லைவனம் வந்து வியாக்ரபாத முனிவருக்கு எண்ணிக்காட்ட மூவாயிரர் என்னுந் தொகையிலே ஒருவரை அங்கே காணது ஹிரண்யவர்மர் திகைத்துநிற்க எல்லாரும் கேட்கும்படி நடேசப்பெருமான் இவ்வந்தணர்களெல்லாரும் நம்மை ஒப்பார்கள், நாம் இவர்களை ஒப்போம், நாம் இவர்களுள் ஒருவர் என்று அருளிச்செய்தார். அதுகேட்ட எல்லாரும் நடுநடுங்கி சிற்சபேசரை வணங்கி அச்சபையைச் சூழ இருந்தார்கள். ஹிரண்யவர்மனர் கனக சபைக்குக் கிழக்குத் திக்கிலே கொற்றவன்குடி என்று ஒரு நகரம் செய்வித்துக்கொண்டு அங்கே இருந்தார். வியாக்ரபாத முனிவர் ஹிரண்யவர்மாவை விவாஹம் செய்வித்து முடிசூட்டிப் புலிக்கொடி கொடுத்துச் சோழ ராஜாவாக்கித் தம்பிமார்களை கௌட தேசத்தை ஆளும்படி உத்திரவுசெய்தனுப்பினர். ஹிரண்ய வர்மனர் வியாக்ரபாத முனிவருடைய அக்ஞைப்படி சிற்சபேசருக்குப் பொன்னம்பலமும் ஸ்ரீ மூலஸ்தானேச்வரருக்குத் திருக்கோயிலும் திருமாளிகைகளும் திருமதில்களும் திருக்கோபுரங்களும் திருவீதியிலே தில்லை வாழந்தணர்களுக்குத் திருமாளிகைகளும் கட்டுவித்து ஆலயத்திலே பூஜை திருவிழா முதலியன செய்தற் பொருட்டு வேத விதிப்படி பதஞ்ஜலி முனிவரைக்கொண்டு

பத்ததி செய்வித்து அந்த வைதிக விதிப்படி பூஜை திரு விழா முதலியன எல்லாவற்றையும் சிரத்தையுடன் செய் வித்து நாள்தோறும் சிவகங்கையிலே ஸ்நானம் செய்து நடேசப் பெருமானை தரிசித்து முனிவர்களுக்குப் பணிவிடை செய்து சிற்சபேருடைய பரிபூர்ண கிருபைக் குப் பாத்ரமானார். இச்சரித்திரத்தின் விரிவை சிதம்பர மாஹாத்மியத்திலும் ஹேமசபாநாத மாஹாத்மியத்திலும் காண்க, மஹாஜ்ஞானியான வஸிஷ்டகுல குருவினுடைய சிஷ்யனான ஹிரண்யவர்மன் காசி முதலான பல புண்ய க்ஷேத்ரங்கள் சென்று கடைசியில் சிதம்பரம் வந்து முக்தி யடைந்தபடியால் பூமியில் எல்லா க்ஷேத்திரங்களுள்ளும் இச்சிதம்பரம் மிகச் சிறந்ததென்னும் ஸாரம் இச்சரித்தி ரத்தால் வெளியாகிறது.

श्रीमान् कर्मपरायणो मुनिवरः शिष्यान्वितो जैमिनिः

भक्त्या यत्र च पादपङ्कजमसावभ्यर्च्य मुक्त्याप्तये ।

स्तुत्वा किंचतुरीय पादनिगमैः स्तोत्रैर्भवन्तं प्रभो

लेभे मुक्तिफलं त्वदंघ्रिकमलं भक्त्या नतोऽहं भजे ॥ २९ ॥

கர்ம நிஷ்டரும் பூர்வ மீமாம்ஸாசாஸ்த்ராபிரவர்த்த கருமான ஜைமினி மஹர்ஷியானவர் சிதம்பரம் வந்து எந்த உம்முடைய சரண கமலத்தைப் பூஜித்து நாலாவது பாதத்தில் வேதவாக்யத்தோடு கூடிய திவ்ய ஸ்தோத்ரங் களால் ஸ்துதிசெய்து முக்திபலமடைந்தாரோ அந்த திவ்ய சரணத்தை பக்தியினால் நமஸ்கரித்து முக்தி பலத்தின் பொருட்டு எப்பொழுதும் த்யானம் செய்கிறேன். இச்சரித் ரம் சிதம்பர மாஹாத்மியத்திலும் புண்டரீகபுரமாஹாத் மியத்திலும் ஸ்பஷ்டமாயிருக்கிறது. உதாஹரணமாக வேதபாதஸ்தவத்தில் ஒரு ச்லோகத்தை எழுதுகிறோம்.

एष एव वरोऽस्माकं नृत्यन्तं त्वां सभापते ।
लोकयन्तमुमां कान्तां पश्येम शरदश्शतम् ॥

ஓ ஸபாநாயகரே! உமாதேவியைப் பார்த்துக்கொண்டு ந்ருத்தம் செய்யும் உம்மையே நூறு ஸம்வத்ஸரகாலம் பார்த்துக் கொண்டிருக்கவேணும். இதுவே எங்களுடைய ப்ரார்த்தனை. குழந்தைகளின் ஆரோக்யத்திற்காகத் தாய் மருந்துண்ணுவது போல் லோகமாதாவான பார்வதியும் ப்ராணிகளின் க்ஷேமத்தைக்கருதி ஸதா ந்ருத்த தர்சனம் செய்கின்ருள். இவ்வாறு ரஸவத்துக்களான 136 ஸ்தோத்திரங்கள் பல வ்ருத்தங்களில் இருக்கின்றன.

श्रीमानप्पयदीक्षितो बुधमणिः स्तुत्यार्थवेत्ता सुधीः
यत्पादांबुजचिन्तनैकशरणः संप्राप्य तिल्लाटवीम् ।
ध्यायन् यच्चरणं शताधिकमहाग्रन्थप्रणेता महान्
मुक्तिं प्राप सुदुर्लभां मुहुरहं वन्दे तमेव प्रभुम् ॥ ३० ॥

ஸகல சாஸ்த்ர பாரங்கதரான அப்பய்ய தீக்ஷிதரென்கிற பக்தச்ரேஷ்டர் எந்த உம்முடைய திவ்ய சரணத்தைத் தியானஞ் செய்து கொண்டு குஞ்சிதாங்க்ரிஸ்தவம் முதலான அனேக ஸ்தோத்ரங்களைச் செய்து சிதம்பரம் வந்து உம்முடைய சரண த்யானத்தால் நூற்று நான்கு க்ரந்த ரத்னங்களைச் செய்து மிகவும் துர்லபமான முக்தியை அடைந்தாரோ அந்த உம்மையே நமஸ்கரிக்கின்றேன்.

पाण्ड्य दुर्मद संज्ञको दुरितकृद्विप्रो भवन्तं सकृत्
दृष्ट्वा कामसमाकुलोपि भगवन् लेभे पदं शाश्वतम्।

आनन्दामृतदान लोलुपवने किं दुर्लभं विद्यते
त्वत्पादांबुज दर्शने सति नृणां तत्तावकांघ्रि भजे ॥ ३१ ॥

துர்மதன் என்று பெயருள்ள மகா பாபியான பாண்டிய தேசத்திலுண்டான ஒரு பிராமணன் ஸ்த்ரீ காமுகனுயிருந்து கொண்டு ஒரு தடவை உம்மைத் தரிசித்து நித்யமான மோக்ஷ பலத்தை அடைந்தான். ஆனந்தாமிர்தத்தைக் கொடுப்பதில் ஆசையுள்ள பிரபுவே! உம்முடைய திவ்ய சரண கமல தர்சனம் ஏற்பட்டபொழுது உலகில் மனுஷ்யர்களுக்குக் கிடைக்கத்தகாதது என்ன இருக்கிறது. ஆதலால் உம்முடைய சரணத்தையே பஜிக்கின்றேன். பாண்டிய தேசத்தில் வேத சாஸ்த்ர பாரங்கதரான ஒரு வைதிக பிராம்மணருடைய குமாரனுன துர்மதனென்று பெயருள்ள ஒரு பிராமணன் ஜன்மாந்தர பாப கர்ம வசத்தால் பல பெரியார்களுடைய உபதேசத்தாலும் திருந்தாமல் ஸுராபானம், பரஸ்திரீ கமனம் முதலான பாபகர்மாக்களேயே செய்துவரும் ஸமயம் பந்துக்கள் ஜாதியிலிருந்தும் விலக்க அரசனும் தேசத்திலிருந்து துரத்த, பல தேசங்கள் திரிந்து மிலேச்ச ஆசாரத்துடன் மார்கழி மாதம் ஆருத்ராதர்சன உத்ஸவஸமயத்தில் சிதம்பரக்ஷேத்ரம் வந்து உத்ஸவாங்கமான தாஸீ ஸ்திரீகள் நர்த்தனங்களேயும் மேளக்கச்சேரி சங்கித கச்சேரிகளேயும் பார்த்துக் கொண்டும் கேட்டுக்கொண்டும் பக்தியில்லாமல் ஸ்ரீ ஸபாநடேசருடைய திவ்ய நர்த்தனத்தையும் தரிசித்து உத்ஸவம் முடிந்த பின் விந்திய பர்வதஞ்சென்று ஸர்ப்பதம்சத்தால் பரலோகமடைந்தான்.

அப்போது யமதூதர்களும், சிவதூதர்களும் அவனே அழைத்துப்போக வந்து கலகம் செய்துகொண்டு யமதூதர்களே அடித்துத் துரத்திவிட்டு சிவதூதர்கள்

துர்மதனை உபசாரத்துடன் அழைத்துக் கைலாஸஞ் சென்ருர்கள். யமதர்மராஜாவும் தங்கள் தூதர்கள் மூலமாய் ஸமாசாரம் தெரிந்து சித்திர குப்தனைக் கொண்டு நன்ருய் கணக்குகளைப் பார்த்தும் துர்மதனுக்கு ஒரு புண்யகர்மாவுமில்லாததைத் தெரிந்து கோபத்துடன் கைலாஸஞ் சென்று அபரசங்கரரான நந்திகேஶ்வரரைத் தரிசித்து மகாபாபியான துர்மதன் விஷயமாக சிவதூதர்கள் செய்த அவமானம் ஸகிக்க முடியவில்லை. என் வேலையை இப்பொழுதே ராஜீனமா செய்து விடுகிறேன் என்று தெரிவிக்க துர்மதன் இடைவிடாமல் மகாபாப கர்மாக்களைச் செய்தபோதிலும் சிதம்பர க்ஷேத்ரத்தில் பாபகர்மாக்களைச் செய்யாமல் ஒருதடவை ஸ்ரீ நடராஜருடைய திவ்ய நர்த்தனத்தை தரிசித்த மஹா புண்யத்தால் பரமசிவ திவ்ய பதமடைந்தான். ஆதலால் உன்னுடைய தூதர்கள் செய்த கார்யமும் அதையனுசரித்து நீ வந்த கார்யமும் மிகவும் குற்றத்திலும் குற்றமானது. இத்தடவை மன்னித்தேன் என்று ஆக்ஞாபித்து சிவ பக்தர்களுடைய பல அடையாளங்களை உபதேசித்தருளினர் — என்கிற இதிஹாஸத்தை புண்டரீகபுர மாகாத்மியத்தில் இரண்டாவது அத்யாயத்தில் ஸ்ரீ வேத வ்யாஸ மஹர்ஷி ஜைமினி மஹர்ஷிக்கு உபதேசித்திருக்கின்ருர்.

श्रेष्ठं स्थानमिदं सभेश भुवने तस्माच्च तीर्थं महत्
तस्मान्नाथ चिदंबरं तदधिको मन्त्रश्च तस्माद्भवान् ।
त्वत्तस्त्वत्पदसारसं नटपते श्रेष्ठं च तस्मादहं
हित्वा क्षुद्रफलप्रदान् सुरगणान् त्वत्पादपद्मं भजे ॥ ३२ ॥

ஸபாபதே! உலகில் இந்தச் சிதம்பர க்ஷேத்ரமானது உத்தமம். இதைக்காட்டிலும் இங்குள்ள சிவகங்கை என்னும் தீர்த்தம் மிக உத்தமம். இதைக் காட்டிலும் சிதம்பர பஞ்சாக்ஷர மகாமந்த்ரமானது மிக உத்தமம். இதைக் காட்டிலும் நடனபதியான நீ உத்தமோத்தமர், உம்மைக் காட்டிலும் உம்முடைய திவ்ய ஸ்ரீ குஞ்சித சரண கமலம் மிக ச்ரேஷ்டமானது. ஆகையால் அல்ப பலத்தைத் தருகின்ற மற்ற தேவகணங்களை விட்டு உம்முடைய சரண கமலத்தையே பஜிக்கின்றேன். இவ்வாறே ஸ்ரீ சிதம்பர மாகாத்ம்யத்தில் 24 வது அத்யாயத்தில் வியாக்ரபாத மஹரிஷி ஹிரண்ய வர்ம சக்ரவர்த்திக்கு உபதேசிக்கின்ருர்.

भूमौ स्थानमिदं श्रेष्ठं स्थानात्तीर्थं महत्तरम् ।

तीर्थाच्चिदंबरं श्रेष्ठं श्रेष्ठो मन्त्रश्चिदंबरात् ॥

मन्त्रान्महेश्वरो देवः महादेवो महानटः ।

देवात् श्रेष्ठतमस्तस्य श्रीमान् ताण्डव भूषितः ।

भवांभोधिमहापोतः पादः पद्मारुणच्छविः ।

तस्य दर्शनमात्रेण सकृत्पापी च मुच्यते । என்று

कैलासाचल ताण्डवं पशुपते कात्यायनी केवलं

पश्यत्यत्र तु सर्वदा नटपते पश्यन्ति मर्त्या अपि ॥

किंच त्वन्नटनेक्षणेन मनुजः प्राप्नोति मुक्तिं परां

तस्मात्सर्वमहं विहाय चरण भक्त्या भजे तावहम् ॥ ३२ ॥

ஓ பசுபதே ! கைலாஸ பர்வதத்தில் உம்முடைய தாண்டவத்தை பார்வதீ தேவி மட்டும் தர்சிக்கின்றாள். இச்சிதம்பர க்ஷேத்ரத்திலோ எப்பொழுதும் மனுஷ்யர்களும் தர்சிக்கின்றார்கள். ஓ நடநாயக ! மேலும் உம்முடைய நடனதர்சனத்தினுலேயே மஹர்ஷிகளால் மஹா தபோ விசேஷங்களால் அடையக்கூடியபரமமுக்தியையும் மூடனுன மனுஷ்யனுமடைகின்றான். ஆகையால் ஸகல தேவதைகளையும் விட்டு உம்முடைய சரணத்தையே பக்தியால் பஜிக்கின்றேன். இவ்வாறே சிதம்பர மாஹாத்ம்யம் 24 வது அத்தியாயத்திலும் ஸூதஸம்ஹிதை முக்தி கண்டத்திலும் ஸ்ரீ நந்திகேச்வரர் சௌனக மஹர்ஷிக்கு உபதேசிக்கின்றார்.

कैलासे सर्वदा देवः ताण्डवं तनुते मुने ।

केवलं तमुमादेवी पश्यत्यन्यो न पश्यति ॥

पुण्डरीकपुरे किन्तु भगवाननिशं शिवः ।

श्रीमदभ्रसभामध्ये तनोत्यानन्द ताण्डवम् ॥

तत्सनातनमित्याहुः सर्वदृश्यं च शौनक ।

दिदृक्षा तव यद्यस्ति तत्त्वं गन्तुमर्हसि ।

नापरं शिवगङ्गायाः तीर्थं स्थानं चिदम्बरात् ॥

तन्मन्त्रान्नापरो मन्त्रः नास्ति देवो नटेश्वरात् ॥

तदालोक्याप्नुहि फलं चार्मणस्येव चक्षुषः

ஓ சௌனக ! பரமசிவன் கைலாஸ பர்வதத்தில் செய்யும் தாண்டவத்தை உமாதேவிமட்டும் பார்க்கின்றாள்

மற்ற ஜனம் பார்ப்பதில்லே. புண்டரீக புரத்தில் ஸ்ரீ சித்ஸபாநாதன் ஸ்ரீ சித்ஸபையின் நடுவில் எப்பொழுதும் ஆனந்த தாண்டவஞ் செய்கின்ருர். அந்த தாண்டவம் அநாதியாம். எல்லோராலும் காணத்தகுந்தது. உனக்குப் பார்ப்பதில் ஆசையிருக்குமாளுல் சிதம்பரம் போ. தீர்த்தம் க்ஷேத்ரம் மந்த்ரம் மூர்த்தியெல்லாம் அவ்விடத்தில் மிகச்சிறந்ததிலும் சிறந்தது. அந்த தாண்டவத்தை தரிசித்தே உன் " சர்ம சக்ஷுஸ்ஸினுடைய ஸாபல்யத்தை அடை " என்று உபதேசித்தார்.

कैलासाद्रिमुखानि सन्ति भुवने स्थानानि भूयांसि ते
स्वामिन् तेषु सभापते विजयसे यत्किञ्चिदंशान्वितः
किन्त्वत्रैव समग्ररूप सहितः श्रीचित्सभायां सदा
तस्मादत्र भवन्तमेव भगवन् वन्देऽनिशं मामव ॥ ३४ ॥

ஓ நாத! ஓ ஸபா நாயக! கைலாஸம் முதலான பல ஸ்தானங்கள் உமக்கு இருக்கின்றன. அவ்விடத்தில் அம்ச ரூபமாகத்தான் இருக்கின்றீர். இந்த சிதம்பரத்திலோ ஸ்ரீ சித்ஸபையில் பூர்ண அம்சத்தோடு எப்பொழுதும் பிரகாசிக்கின்றீர். ஆகையால் ஓ பூஜ்யரே! உம்மையே எப்பொழுதும் நமஸ்கரிக்கின்றேன். என்னேக் காப்பாற்றும். புண்டரீக புரத்தில் சிற்சபையில் மட்டும் பூர்ண அம்சத்தோடு பிரகாசிப்பதற்குக் காரணத்தையும் பிரமாணத்தையும் அடுத்த ஸ்துதியால் விசதமாய் நிரூபிக்கின்ருர்.

त्वत्क्षेत्रेष्विदमुत्तमं हृदयगं यस्माद्विराजः प्रभो
यत्र व्यक्तिस्वरूपैति सत्सुखचिदाकारस्य सर्वात्मनः ।

छन्दोगश्रुतिरत्र मानमपि सा निरुक्ति या हृद्यय
शब्दं तं हृदयं भजामि हृदये त्वामेव नित्यं विभो ॥ ३५॥

யாதொரு காரணத்தால் ப்ரபஞ்ச ரூபியான விராட் புருஷனுடைய ஹ்ருதய ரூபமாக இச்சிதம்பரமிருக்கின்றதோ, ஸச்சிதானந்த ரூபியான ஸர்வாந்தர்யாமியான பரமாத்மாவுக்கு எந்த ஹ்ருதயத்தில் ப்ரகாசம் ஏற்படுகின்றதோ, அந்தக் காரணத்தால் உம்முடைய ப்ரகாச ஸ்தானமான காசி, காஞ்சி, மதுரை முதலான பல க்ஷேத்திரங்களுக்குள் இச் சிதம்பர க்ஷேத்ரம் மிகவும் உத்தமமானது. இவ்விஷயத்தில் சாந்தோக்யோபநிஷத் ராஜாஜ்ஞைபோல் ஸ்வதந்தர ப்ரமாணமாயிருந்துகொண்டும் தாய் குழந்தைகளிடம் கருணை பாராட்டுவதுபோல் வேத மாதாவும் ப்ராணிகளுடைய கருணையால் அர்த்தத்தை விசதமாய் போதிப்பதின் பொருட்டு நிர்வசனம் செய்து யுக்தி ரூபமாயும் போதிக்கிறது.— **हृदि** ஹ்ருதயத்தில் **अयं** இந்த மகாத்மா பிரகாசிக்கின்றார் என்கிற அர்த்தத்தையே ஹ்ருதய சப்தமானது போதிக்கிறது. ஆதலால் ஓ ப்ரபோ! ஹ்ருதயத்தில் உம்மையே நித்யம் பஜிக்கின்றேன்!!. ஸ்ரீ ஜாபால தர்சனோபநிஷத், கைவல்யம், ஸூத ஸம்ஹிதை, புண்டரீகபுர மாகாத்மியம் முதலான புராணங்களும், சிதம்பரம் விராட் புருஷ ஹ்ருதயஸ்தானமென்று கூறுகின்றது. சாந்தோக்யோபநிஷத் பிரம்மபுரம் என்கிற சரீரத்தில் புண்டரீகாகாரமான (தாமரை உருக்கொண்ட) ஹ்ருதய கிருஹத்தில் அதிஸூக்ஷ்மமான ஆகாசத்தில் ஞானகாச ரூபியான பரமாத்மாவை அனுஸந்தானஞ் செய்யவேணுமென்று தஹரோபாஸனத்தையும் ஹ்ருதயத்தில் தான் பரமாத்மாவின் பிரகாச ஸ்தானம் என்று ஹ்ருதய சப்த நிர்வசனத்தையும் கூறுகின்றது.

இந்த தஹரோபாஸன ஸ்தானமான ஹ்ருதய சப்தத்திற்கு ஆத்யாத்மிகமான மனுஷ்ய சரீர ஹ்ருதயமென்றும் ஆதிபௌதிகமான விராட் புருஷனுடைய ஹ்ருதயமான சிதம்பரமென்றும் இருவகையான அர்த்தத்தை பிரம்ம ஸூத்ர கர்த்தாவான வியாஸ மஹர்ஷி ஜைமினி மஹர்ஷிக்கும் ஸூத மஹர்ஷிக்கும் புண்டரீகபுர மாகாத்மியம் முதல் அத்தியாயத்தில் விசதமாய் உபதேசித்திருக்கின்றார். இந்த அபிப்பிராயத்தை பிரம்ம ஸூத்ர தஹராதிகரண பாஷ்யத்தில் நீலகண்டாசார்யாளும் சிதம்பரம் என்கிற பதத்தால் ஸூசித்திருக்கின்றார்கள். ஆதலால் பிரம்மபுரமான விராட் சரீரத்தினுடைய புண்டரீக ரூப ஹ்ருதய ரூபமான சிதம்பர சித்ஸபையில் தஹர சிதாகாச ரூபியான ஸ்ரீ நடராஜ மூர்த்தியை தர்சிப்பது தஹரோபாசனமாகும் என்பதை சுருதிஸ்மிருதி புராணம் பிரம்ம ஸூத்ரம் முதலானதுகள் விசதமாய் போதிக்கின்றன. ஆதலால் இந்த சிதம்பர க்ஷேத்ரத்தில் வஸிப்பவர்கள் யாவரும் தஹரவித்யோபாஸகர்கள் என்கிற படியாலும் ச்ருதி ரீதியாக தர்சனத்தினலேயே முக்தியளிக்கும் க்ஷேத்ரமாகையாலும் ஹ்ருதய திருப்தியால் சரீரம் பூராவும் திருப்தியடைவது போல் சுருதி பிரமாணப்படி விராட் ஹ்ருதய புண்டரீகவாசியான நடராஜ பூஜையால் ஸகல க்ஷேத்ர மூர்த்திகளின் திருப்தி ஏற்படுகிறபடியாலும், ஸகல இந்திரியங்களும் ஹ்ருதயத்தில் ஸுஷுப்தியில் லயத்தை அடைவது போல், ஸகல க்ஷேத்ரங்களும் சிதம்பரத்தில் லயமடைவதாலும், க்ஷேத்ராந்தரத்தில் இருக்கும் தேவதைகள் யாவர்களும் அர்த்தயாம சமயத்தில் சிதம்பரம் வந்து தர்சிக்கிற படியாலும், ஸ்வஸ்வரூபானுசந்தானத்தால் தாண்டவஞ்செய்கிற திவ்ய நடேசமூர்த்தியை முஹூர்த்த காலந் தியானஞ் செய்வதால் ஸர்வபந்த முக்தர்களாகின்றார்கள், என்று வராஹோபநிஷத் கூறுவதாலும்

கைவல்யம் சாந்தோக்யம் ஜாபால தர்சனுதி உபநிஷத் பிரதிபாத்யமாகையாலும், அன்ய திவ்ய க்ஷேத்ர தேவ தைகள் உபதேசத்தால் மணிவாசகர், நந்தன் முதலான பக்த கோடிகள் சிதம்பரம் வந்து பரம முக்தியடைந்திருப் பதாலும் ஸூத ஸம்ஹிதாதி பல புராணங்களால் போற் றப்பட்ட சிவகங்கை பரமானந்த கூபம் முதலான தச திவ்ய தீர்த்தங்களோடு கூடியிருப்பதாலும் ஈசனுடைய அநேக க்ஷேத்ரங்களுக்குள் சிதம்பரம் மிகச் சிறந்த தென்பதை இந்த ஸ்துதியால் நிரூபித்திருக்கின்ருர்.

अभ्रव्यापि सभामहः पुर वरप्रोद्भासकं लोकयन्
नूनं चन्द्रदिवाकरौ निजकृतेर्वैफल्यमवाप्नुतः ।
अन्तर्नृत्यदुमेशदीप्तिनिचयो व्याप्नोति किंचाम्बरं
बुद्धिं व्योमगतां तनोति भगवन् वन्दे मुहुस्तन्मुहुः ॥ ३६

இந்தச் சிதம்பரத்தில் ஆகாசத்தை வியாபிக்கிறதும், புரச்ரேஷ்டத்தைப் பிரகாசிக்கச் செய்கிறதுமான ஸ்ரீ சித் ஸபையின் காந்தியைப் பார்க்கிற சந்திர சூர்யர்கள் தங்கள் ஸ்ருஷ்டியின் பிரயோஜனமில்லாததை அடை கிருர்கள். உண்மையே, மேலும் சபையின் நடுவில் நர்த்தனம் செய்கின்ற உமாநாதனுடைய காந்தி ஸமூக மும், ஆகாசத்தை வியாபிக்கின்றது. பார்க்கிற ஜனங் களுடைய புத்தியை, ஆகாசத்தை அடைந்ததாகவே செய் கிறது. ஓ பூஜ்யனே! அந்த உம்முடைய காந்தியை ஸதா நமஸ்கரிக்கிறேன். கோடி ஸூர்ய சந்த்ர ப்ரகாச மான ஸபையினுடைய காந்தியும் ஸபேசனுடைய காந்தி யும் பக்த ஜனங்களுடைய மனசைப் பரவசமாகச் செய் கிறதென்று கருத்து.

स्तम्भो हेममयः पुरो विजयतां यः केतुघण्टान्वितः
त्वत्पूजासमयेऽन्वहं दिविषदस्संभूय यस्यान्तिके ।
घण्टाताडनमाचरन्ति समुदं तद्घोषसंप्रेरिताः
देवा धातृमुखा त्वदीयचरणं ध्यायन्ति कैवल्यदम् ३७

ஓ ஸபேச! உம்முடைய பூஜா காலத்தில் தினந் தோறும் தேவர்கள் கூடிக்கொண்டு எந்த த்வஜஸ்தம்பத்தினுடைய அக்ரபாகத்தில் இருக்கிற மணிகளை அடிக்கின்றார்களோ, அந்த சப்தம்கேட்டு ப்ரம்மா முதலான தேவர்கள் முக்தி ப்ரதமான உம்முடைய சரணத்தை தியானம் செய்கின்றார்களோ, அவ்வித ஸ்வர்ணமய த்வஜஸ்தம்பமானது உம்முடைய ஸன்னிதியில் சர்வோத்கர்ஷமாய் பிரகாசிக்கட்டும்.

स्वामिन् तावकगोपुराणि विपुलान्याचन्द्रबिम्बं प्रभो
व्याप्तानीश महान्ति चारुशिखराण्याभान्ति चत्वार्यहा ।
मन्ये नाथ लसन्ति तावकपुरे रम्याः कुलक्ष्माभृतः
नैवास्तेऽत्र गुहेति चेन्नटपते साप्यस्ति रम्या विभो ॥ ३८ ॥

ஓ நாத! ஓ ப்ரபோ! பெரிதுகளாயும் விசாலங்களாயும் அழகான சிகரங்களை உடையதுகளாயுமுள்ள உம்முடைய நான்கு கோபுரங்கள் சந்த்ர மண்டலத்தை வ்யாபித்திருக்கின்றன. உம்முடைய பட்டணத்தில் நான்கு குல பர்வதங்கள் தான் பிரகாசிக்கின்றனவோ என்று தோன்றுகிறது. பர்வதங்களானல் குகைகள் இல்லையே என்று சந்தேஹிக்கவேண்டாம். அழகான

குகைகளும் இருக்கின்றன. அக்குகைகளில் கோவிந்த பகவத் பாதாள் முதலான மஹான்கள் வசித்ததாகவும் பெரியோர்கள் பரம்பரையால் தெரிகின்றது.

नमामि गोपुराणीश तवमूर्त्यन्तराण्यहम् ।
तान्यद्य परया भक्त्या मुक्तये करुणानिधे ॥ ३९ ॥

ஓ கருணைக்கடலான ஈசனே! உம்முடைய மூர்த்தி துல்யங்களான அந்த கோபுரங்களை அதிக பக்தியோடு முக்தியின் பொருட்டு நமஸ்கரிக்கின்றேன். ஸ்ரீ நந்தி கேச்வரருக்குப் பரமசிவன் புண்டரீகபுர வைபவத்தை உபதேசிக்கின்ற சிதம்பரமாஹாத்ம்யம் 3வது அத்யாயத்தில் ஸுந்தரங்களான கோபுரங்கள் என்னுடைய மூர்த்தி துல்யங்கள் என்று கூறப்பட்டிருக்கிறது.

देहोयं विविधैर्गदै रनुदिनं संपीड्यते तन्मनः
त्वद्ध्याने निपुणेतरत्कथमहं मुक्तिं परां प्राप्नुयाम् ।
तस्मादेव करादिकं च भगवन् त्वत्पूजनादीन् विभो
नेष्टे कर्तुमुमापते मम गदान् नष्टान् कुरु त्वं सदा ४०

இந்தச் சரீரம் தினந்தோறும் பலரோகங்களால் பீடிக்கப்படுகிறது. ஆதலால் மனமானது உம்முடைய தியானத்தில் சாமர்த்திய மில்லாமல் இருக்கின்றது. பரையான முக்தியை எப்படி அடைவேன்? ஓ! பூஜ்யனே! ஓ! விபோ! ரோக வசத்தால் கை முதலானதும் உம்முடைய பூஜை முதலானதுகளைச்செய்வதற்கு அசமர்த்தமாய் இருக்கின்றது. ஓ உமாகாந்த! ஆதலால் எப்பொழுதும் எனக்கு ரோகமில்லாமல் இருக்கும்படி அனுக்ரஹம் செய்யும். ஸமஸ்த தினங்களிலும் ஔஷதம்

போல் ஸமஸ்த ரோகங்களுக்கும் நாசகரமான மங்களகர மான உம்முடைய திவ்ய சரீரம் எங்களுக்கு ஸுகத்தைக் கொடுத்து ஜீவிக்கச் செய்ய வேணுமென்று ஸ்ரீ ருத்ரம் பத்தாவது அனுவாகம் கூறுகின்றதல்லவா!

कालेऽस्मिन् कलिवैभवान्मतियुतास्सन्तोऽपि केचिन्नराः
त्वत्पादाम्बुजयुग्मदर्शनविधौ दुःख्यन्ति सम्मोहिताः ।
तेषामीश कथं भवेत्तव कृपापाङ्गाः सुखैकप्रदाः
मद्भाग्योदयतो हि भक्तिलतिका जागर्तिहानिप्रदा ॥ ४१ ॥

இந்தக் காலத்தில் கலிமஹிமையால் புத்தியுள்ளவர் களும், ஸாதுக்களுமான சில ஜனங்கள் மோஹத்தை யடைந்து கொண்டு உம்முடைய திவ்ய சரண கமல தர்சனத்தில் துக்கிக்கிறார்கள். ஓ ஈசனே! சுகத்தைத் தருகின்ற உம்முடைய கிருபாகடாக்ஷங்கள் அவர்களுக்கு எப்படி ஏற்படும்? மனுஷ்யர்களுடைய துக்கத்தை நாசம் செய்கின்ற பக்திக்கொடியானது என்னுடைய ஜன் மாந்திர பாக்கிய வசத்தாலல்லவோ எனக்கு உண்டா யிருக்கின்றது. உலகில் மனுஷ்யர்களுக்கு தீக்ஷ்ண புத்தி யினாலும் சாஸ்த்ர பாண்டித்யத்தாலும் ஸாது ஸ்வபாவத் தாலும் "சிவ பக்தி உண்டாகக்கூடியதல்ல. கோடி ஜன் மாக்களில் ஸம்பாதிக்கப்பட்ட" புண்ணியங்களால்தான் மங்களகரமான சிவபக்தி உண்டாகின்றதென்று அர்த்த முள்ள

कोटि जन्मार्जितैः पुण्यैः शिवे भक्तिः प्रजायते । என்று

சிவகீதா வசனத்தின் கருத்தை ஸ்துதி கர்த்தா நிரூபிக் கின்றார்.

स्वामिन्प्रत्यहमाचरामि दुरितं निश्शंकमेवानिशं
कामक्रोधमदादयोऽपि भगवन् मुञ्चन्ति नो मां सकृत् ।
किन्त्वीशत्वयि भक्तिरस्ति चपला श्रीमन्नटेशाधुना
तामेकां परिगृह्यपापिनममुं कारुण्यतः पावय ॥ ४२ ॥

ஓ ஸ்வாமின்! நான் தினந்தோறும் வெட்கமில்லாமல் பாபத்தைச் செய்கின்றேன். ஆதலால் துராசை, கோபம், கொழுப்பு முதலான துர்குணங்கள் என்னை விடுகிறதில்லை. ஆகிலும் ஈசனே! சஞ்சலமான பக்தி உம்மிடத்தில் எனக்கு இருக்கின்றது. ஓ திவ்ய நடேச! அந்த பக்தியை மட்டும் ஸ்வீகரித்து இப்பொழுது பாபியான என்னைக் கருணையினால் பரிசுத்தஞ் செய்யும்.

स्वामिन्भूसुर पीडनोद्भवमहापापान्विते दिक्पतौ
सर्वेष्वब्धिषु निर्जलेषु विबुधैः गीर्वाण नाथादिभिः ।
तिल्वारण्यगतैर्नुतश्च वरुणे पापात्पुनासि स्म तं
गत्वा माघ मखेऽब्धि मीश भवतः किंदुष्करं मामव ॥ ४३ ॥

ஓ ஸ்வாமின்! மேற்கு திக்பாலனை வருணன் பிராமண ஹிம்ஸையால் மகாபாபத்தை அடைந்த பொழுது ஸகல ஸமுத்திரங்களும் ஜலமில்லாமலிருக்கும் பொழுது தில்வாரண்ய மென்கிற சிதம்பர க்ஷேத்ரம் அடைந்த இந்திரன் முதலான தேவர்களால் ஸ்துதிக்கப்பட்ட நீர் மாசி மாஸ மகநக்ஷத்திரத்தில் சுமார் ஒன்பது மைல் தூரமுள்ள ஸமுத்திரஞ்சென்று அந்த வருணனைப் பாபத்திலிருந்து பரிசுத்தம் செய்தீரல்லவா! ஓ ஈச! உமக்கு எதுதான் செய்ய முடியாதது? என்னைக் காப்பாற்றும்.

முன் காலத்தில் வருணன் ஒரு ராக்ஷஸனேடு அநேக வர்ஷங்கள் யுத்தம் செய்யும் பொழுது இரவில் ஒரு பிராமண ச்ரேஷ்டன் இருவர்களுடைய சமாதானத்தின் பொருட்டு ஸமீபத்தில் வர ராக்ஷஸன் என்ற புத்தியினுல் வருணன் அந்த பிராம்மணனைக் கொன்ருன். அந்த பிர்ம்மஹத்தி மஹா பாபத்தினுல் வருணன் தேஜஸ் குறைந்தது. ஏழு ஸமுத்ரங்களும் கோஷித்தன. மழை பெய்யவில்லை. தாபம் அதிகரிக்கிறது. ஜனங்கள் அதிக கஷ்டத்தை அடைந்தனர். பூமியில் யக்ஞங்கள் இல்லாததால் மிகக்கஷ்டமடைந்த இந்திரன் முதலான தேவர்கள் தில்லை வனம் வந்து ஸ்ரீ ஸபாநாயகரை ஸ்தோத்திரஞ் செய்து ஜலபதியான வருணனுடைய மஹாபாபத்தை நிவர்த்தி செய்ய வேணுமென்று பிரார்த்தித்தார்கள். ஸமுத்ர தீரத்துக்குப் போய் நாம் வருணனுடைய பாபத்தை நிவர்த்தி செய்வோம் என்று சொல்லி மாசி மக நக்ஷத்திரத்தில் கருணு ஸமுத்ரமான ஸ்ரீ நடேசர் சிதம்பர க்ஷேத்திரத்தின் வடகிழக்கிலுள்ள ஸமுத்ர தீரத்தை அடைந்தார். ஈசனருளால் வருணனுடைய ஸமஸ்த பாபமும் நாசமடைந்தது. இந்த தினத்தில் இந்த தீரத்தில் ஸ்நானஞ் செய்யும் ஜனங்களுக்கு ஸமஸ்த பாபங்களும் ஸமஸ்த ரோகங்களும் விலகவேணும். பரம பத லாபங்கிடைக்க வேணும் என்று வருணன் யாசிக்க அவ்விதமாகவே வரமளித்து ஸபாநாதர் மறைந்தார் என்னும் சரித்திரத்தை சிதம்பர மாஹாத்ம்யம் 26-வது அத்தியாயத்தில் காண்க. குஹ்ய தீர்த்தமென்று மிகச் சிறப்பாய் புண்டரீகபுர மாஹாத்ம்யத்திலும் கூறப்பட்டு உள்ள இந்த ஸமுத்ர தீரத்தில் இப்பவும் மாசி மகத்தில் ஸ்ரீ ஸபாநாயகருடைய மஹோத்ஸவம் சிறப்பாய் நடைபெற்று வருகிறது. சிதம்பரத்தில் பத்து மஹா புண்ய தீர்த்தங்களில் இது இரண்டாவது தீர்த்தமாம். அவை யாவன :—

(1) சிவகங்கை, (2) குஹ்ய தீர்த்தம், (3) புலிச்ச மடு, (4) வியாக்ரபாத தீர்த்தம், (5) அனந்த தீர்த்தம், (6) நாகச்சேரி, (7) பிரம தீர்த்தம், (8) ஶிவப்ரியை, (9) திருப்பாற்கடல், (10) பரமானந்த கூபம். இவைகளின் வைபவத்தை புண்டரீகபுர மாஹாத்ம்யம் 6-வது அத்தியாயத்தில் காண்க.

भक्तानन्दन तावकीन चरणं पद्मारुणं पावनं
ये पश्यन्ति सकृज्जनाः करगता तेषां विमुक्तिः स्थिरा ।
इत्येवं प्रतिपादयन्ति निगमाः तस्मात्त्वदंघ्रिं भजे
दीनं मां घृणया त्वदेक शरणं संसारमुक्तम् कुरु ॥ ४४ ॥

பக்தர்களை ஸந்தோஷிப்பிக்கின்ற பரமசிவ! தாமரைப்பூபோல் சிவந்த பரிசுத்தமான உம்முடைய சரணத்தை ஒரு தடவை எவர்கள் தர்சிக்கின்றூர்களோ அவர்களுக்கு ஸ்திரமான முக்தியானது ஸித்தம் என்று வேத புராணங்கள் கூறுகின்றன. ஆதலால் உம்முடைய சரணத்தை பஜிக்கின்றேன். உம்மையே கதியென்று நம்பின தீனனுன என்னைக் கருணையால் ஸம்ஸார துக்கத்திலிருந்து விடுபட்டவனுகச் செய்யும்.

ज्ञानानन्द सभाधिनाथ भुवने त्वन्नृत्तसंदर्शनात्
मुक्तिं यान्ति मृगाश्च बोधरहिता यत्नेन लभ्यामपि ।
स्वामिन् तत्तव ताण्डवं प्रतिदिनं पश्यामि भक्त्यन्वितः
तस्मात् त्वं करुणांबुधे सकरुणं मां पाहि दुःखार्णवात् ॥ ४५

ஞாநாநந்த ஸபாநாயக, உலகில் உம்முடைய தாண்டவ தர்சனத்தால் அறிவில்லாத ம்ருகங்களும் யத்னத்தால் அடையக் கூடிய முக்தியை அடைகின்றன. ஓ

ஸ்வாமின்! கருணைக் கடலே! அந்தத் தாண்டவத்தைத் தினந்தோறும் பக்தியோடு கூட தர்சிக்கின்றேன். ஆதலால் நீர் க்ருபை செய்து என்னைத் துக்க ஸமுத்ரத்தினின்றும் காப்பாற்றும், ஸ்ரீ நடேசருடைய தாண்டவத்தில் சரண நூபுர சத்தங்கேட்டு ம்ருகங்களும், பக்ஷிகளும் வந்து தர்சித்துப் பதஞ்சலி மஹர்ஷியின் துஷ்கர தபோ மஹிமையால் அடையப்பட்ட முக்தி பலத்தை அடைந்தன என்று சிதம்பர மாஹாத்ம்யம் 18 வது அத்யாயம் கூறுகின்றது.

नाथ त्वन्मुखपद्मबन्धुमसकृद्ध्यायामि मन्मानसे
गौरीवक्त्रसरोजहर्षजनकं पापान्धकारद्विषम् ।
संसाराख्यगदापनोदचतुरं कारुण्य वृष्टिप्रदम्
क्षिप्रं मामकवांछितं नटपते संपूरय त्वं प्रभो ॥ ४६ ॥

ஓ நாத! காருண்யமாகிற மழையைப் பெய்கிறதும் ஸம்ஸாரமென்கிற ரோகத்தை நிவர்த்தி செய்கிறதும், பாபமாகிற இருளை விலக்குகிறதும், பார்வதியினுடைய முகமாகிற தாமரைப் புஷ்பத்திற்கு ஸந்தோஷத்தைத் தருகிறதுமான உம்முடைய முகமாகிற ஸூர்யனை எப்பொழுதும் என்னுடைய ஹ்ருதயத்தில் த்யானம் செய்கிறேன். ஓ நடபதியான ப்ரபுவே! என்னுடைய இஷ்டத்தை சீக்ரமாகப் பூர்த்திசெய்யும்.

शंभो मामकमानसाख्यमधुपः त्वत्पादपद्मोद्भवां
कैवल्याख्यसुधां पिपासुरधुना शीतांशु चूडामणे ।
सञ्चारन्तनुते त्वदंघ्रिकमले भक्तार्तिहानि प्रदे
कारुण्यादमृतं प्रदाय तदमुं तृप्तं कुरु त्वं प्रभो ॥ ४७ ॥

ஓ சம்போ ! ஓ சந்த்ர சேகரா ! என்னுடைய மன தாகிற வண்டானது உம்முடைய சரணமாகிற தாமரைப் புஷ்பத்தில் உண்டான மோக்ஷமாகிற அம்ருதத்தைப் பானம் செய்வதற்கு ஆசைகொண்டு, பக்தர்களுடைய துக்கத்தை நிவர்த்தி செய்கின்ற உம்முடைய சரண கமலத்தில் இப்பொழுது ஸஞ்சரிக்கின்றது. ஆகையால் ஓ ப்ரபோ ! கருணையால் அம்ருதம் கொடுத்து இந்த மனதாகிற வண்டை நீர் த்ருப்தி உள்ளதாகச் செய்யும்.

लोके सन्ति विचक्षणा बुधजनाः तत्त्वार्थसन्दर्शिनः

त्वत्पादाम्बुज वन्दनैकरतयः कारुण्यपात्रीकृताः ।

स्वामिन्मन्दमति स्त्वहं तव कृपां वांछामि सर्वेष्टदाम्

लज्जाशून्यमनाः विधेहि करुणां दीनाग्रगण्ये मयि ॥ ४८ ॥

ஓ ஸ்வாமின் ! உலகில் தத்வார்த்தத்தை அறிந்தவர்களும், உம்முடைய சரண கமல நமஸ்க்ருதியிலேயே ஆசையுள்ளவர்களுமாகையால் உம்முடைய கருணைக்குப் பாத்ர பூதர்களுமான ஸமர்த்தர்களான பண்டிதர்கள் இருக்கின்றார்கள். அல்ப புத்தியுள்ளவனான லஜ்ஜை இல்லாதவனான நான் ஸர்வேஷ்டங்களையும்கொடுக்கின்ற உம்முடைய கருணையை இச்சிக்கின்றேன். மூடச்ரேஷ்டனான என்னிடத்தில் கருணை செய்யும்.

राजानं समुपैति पण्डितजनः संपत्तिसंसिद्धये

छात्राणां निवहो यथा गुरुवरं विज्ञानसंसिद्धये ।

तद्वन्मामकमानसं नटपते पादाम्बुजं तावकम्

सानन्दं समुपैति मुक्तिफलदं कैवल्यसंसिद्धये ॥ ४९ ॥

பண்டித ஜனமானது பொருள் ஸம்பாதிப்பதின் பொருட்டு அரசனை எப்படி அடைகின்றதோ, சிஷ்ய ஸமூகமானது ஞானத்தை அடைவதின் பொருட்டு உத்தம குருவை எப்படி அடைகின்றதோ ஓ நடநாயக! அது போல் என்னுடைய மனமானது முக்திபலத்தைக் கொடுக்கின்ற உம்முடைய சரணகமலத்தை மோக்ஷத்தை அடைவதின் பொருட்டு ஆனந்தத்தோடு கூட அடைகின்றது.

नामं नामं त्वदीयं पदकमलयुगं मञ्जुमञ्जीरयुक्तं
दर्शं दर्शं त्वदीयं वदनशशधरं मन्दहासेनयुक्तम् ।
स्मारं स्मारं त्वदीयं गुणनिचयलवं भोगिराड्वर्णनीयं
ध्यायं ध्यायं कदा वा हृदय सरसिजे त्वामहं निर्वृतस्याम् ॥५०

ஓ திவ்ய நடேச! அழகானபாதஸரங்களோடு கூடிய உம்முடைய இரண்டு சரண கமலத்தைச் சொல்லிச் சொல்லி வணங்கி வணங்கி புன்சிரிப்போடு கூடிய உம்முடைய முக சந்த்ரனைப் பார்த்துப் பார்த்து ஆதி சேஷனால் வர்ணிக்கத் தகுந்த உம்முடைய குண ஸமூகத்தினுடைய லேசத்தை நினைத்து நினைத்து என்னுடைய ஹ்ருதய புண்டரீகத்தில் உம்மை த்யானம் செய்து த்யானம் செய்து நான் எப்பொழுது ஸுகத்தை அடையப் போகின்றேன். சிவனே குரு, சிவனே வேதம், சிவனே தேவன், சிவனே பிரபு, நாம் சிவனே, எல்லாம் சிவனே. சிவனைக் காட்டிலும் வேறொன்றும் இல்லை. பரமசிவனை-யே நன்றாய் அறிந்து ஸ்துதித்து த்யானம் செய்ய வேண்டும். மற்றவைகளைச் சொல்லுவதும் நினைப்பதும் வாக்கு முதலானதுகளுக்கு க்லேசமே என்று வராஹோபநிடதம் கூறுவதால் எந்த நாவு ஈசனை

ஸ்துதி செய்கிறதோ அதுதான் நாவு. எந்தக் கண்கள் ஈசனைப் பார்க்கின்றனவோ அவைதான் கண்கள். எந்த மனம் ஈசனை த்யானம் செய்கிறதோ அதுதான் மனம் என்று சங்கர பகவத்பாதாள் சிவானந்த லஹரியில் ஸ்துதி செய்திருப்பதாலும் மற்ற சப்தங்களைச் சொல்லாமல் உம்முடைய நாமாக்களையே சொல்லியும், உம்முடைய சரணத்தையே வணங்கியும் மற்றவர்களைப் பாராமல் உம்மையே பார்த்துக்கொண்டும், மற்ற துக்ககரங்களான. அநித்யங்களான பதார்த்தங்களை நினையாமல் உம்மையே நினைத்தும், உம்மையே த்யானம் செய்தும், எப்பொழுது பரமஸுகத்தை அடையப் போகிறேன். இதனால் ஒருவன் துக்கலேசமில்லாத ஸுகத்தை அடையவேண்டுமானால் ஸ்ரீ திவ்ய நடேசரையே ஸ்துதி செய்யவேணும். நமஸ்கரிக்கவேணும். தர்சிக்க வேணும். ஸ்மரிக்கவேணும் த்யானம் செய்யவேணும், என்பதை ஸ்துதி கர்த்தா நிரூபிக்கின்றார். ஹ்ருதயாகாசவாஸியான ஆத்மஸ்வரூபமும் சிதம்பரவாஸியான நடேச ஸ்வரூபமும் ஒன்றென்று 35 வது ஸ்துதியால் நிரூபித்திருப்பதால் ஆத்ம ஸ்வரூபத்தைப் பார்க்க வேணும். அதுதான் நித்யானந்த ஸ்வரூபமான மோக்ஷம். அதற்கு ஸாதனமாக த்யானம் செய்யவேணும். அதற்கு ஸாதனமாக ச்ரவணம் செய்யவேணும், என்கிற க்ருத்யார்த்தத்தையும் ப்ரகாசித்திருக்கின்றார்.

मायामोहितमानसस्य भगवन् संसारपाथोधिजं
सर्वं भाति सुखावहं क्षणमहो दुःखावहं च क्षणम् ।
सर्वं तत्किल दुःखमेव हृदये निर्धार्य तत्त्वार्थगः
सत्यानन्दपरो मुहुः श्रुति शिखागम्यं त्वदंघ्रिं भजे ॥ ५१ ॥

ஓ ஸர்வைச்வர்ய ஸம்பந்ந ! மாயையால் மோஹித்த மனஸை உடைய ஜகத்துக்கு ஸம்ஸார ஸமுத்திரத்திலுண்டான ஸமஸ்தமும் கொஞ்ச காலம் ஸுகத்தைக் கொடுப்பதாயும் கொஞ்ச காலம் துக்கத்தைக் கொடுப்பதாயும் தோன்றுகிறது. வேதாந்த விசாரஞ்செய்து ஸச்சிதானந்த ஸ்வரூபத்தையே தியானஞ் செய்கிற நான் அவை எல்லாவற்றையும் துக்க ரூப மென்றே மனஸில் தீர்மானித்து வேதாந்த வேத்யமான உம்முடைய சரணத்தை ஸதா பஜிக்கின்றேன்.

श्रीमद्व्योम सभेश दुष्टकरणस्संभासिनीं मंजुलां
ब्रह्मनन्दविधायिनीं गिरिसुतानेत्रांबुजानन्दिनीम् ।
सन्द्रुष्टं कमलासनादि विनुतां शक्नोमि किं वा जड-
स्त्वन्मूर्तिं निगमेडितां सुकृतकृन्नस्यामहं चेद्विभो ॥ ५२ ॥

ஓ சிதம்பர ஸபாநாத! ஓ விபோ! துஷ்ட இந்திரியங்களை உடைய மூடனான நான் முன் ஜன்மாவில் புண்யத்தைச் செய்யாமல் இருந்தால் பிரகாசிக்கின்றதும் அழகு பொருந்தியதும் பிரும்மானந்தத்தைத் தருகிறதும் பார்வதி தேவியின் நேத்ர கமலங்களுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கிறதும் பிரம்மாதி தேவர்களால் ஸ்துதிக்கப்பட்டதும் வேதங்களால் ஸ்துதிக்கப்பட்டதுமான உம்முடைய மூர்த்தியைப் பார்ப்பதற்கு எப்படி ஸமர்த்தனாவேன்.

भक्त्या शंकर मामकीन नमनैर्नुत्याऽथवाऽस्मिन् जने
कारुण्याद्रुत तावकीनचरणांभोजस्य संपूजया ।
त्वन्मूर्तीक्षणलोललोचनवतो दीनाग्रगण्यस्य मे
क्षिप्रं हैमवतीपते नटपते खेदग्रहाणं कुरु ॥ ५३ ॥

ஓ சங்கர ! பார்வதி காந்த ! ஓ நடநாயக ! பக்தியால் செய்யப்பட்ட என்னுடைய நமஸ்காரங்களினலாவது ஸ்துதியினலாவது என்னிடத்தில் உண்டான கருணையினலாவது உம்முடைய சரணகமல பூஜையினலாவது உம்முடைய மூர்த்தி தர்சனத்தில் ஆசையுள்ள கண்களை உடைய தீன சிகாமணியான என்னுடைய துக்க நிவர்த்தியை சீக்கிரஞ் செய்யும்.

त्वत्पूजासमये दिगन्तकरिणस्त्रस्यन्ति कंपान्विताः
घण्टातूर्यमृदङ्गकादिनिनदैः त्वद्भक्तघोषैरपि ।
किं च त्वद्वदनांबुजं विजयते रत्नत्रिपुण्ड्रोज्वलम्
मच्चेतश्च विनम्रपादकमल दृष्ट्वा मुदं विन्दति ॥ ५४ ॥

ஓ ஆனந்த நடேச! உம்முடைய பூஜாகாலத்தில் மணி-தூர்ய மிருதங்கம் - முதலான சப்தங்களாலும் உம்முடைய பக்தஜன கோஷங்களாலும் நடுங்குகின்ற திக்கஜங்கள் பயத்தை அடைகின்றன, மேலும் இரத்தின திருபுண்ட்ரத்தால் பிரகாசிக்கின்ற உம்முடைய முககமலமானது சர்வோத்கர்ஷமாய் விளங்குகின்றது. என்னுடைய மனமும் உம்முடைய குஞ்சிதசரண கமலத்தைத் தர்சித்து ஸந்தோஷத்தை அடைகின்றது.

दुग्धं खेदमुपेयुषीश्सुरभेः स्मृत्वोपमन्यौ मुनौ
तत्तातेच पुरस्तवैव तनयं निक्षिप्य निष्ठापरे ।
क्षुद्बाधापरिपीडिताय शिशवे क्षीरं प्रदातुं पुरा
या जाता करुणा तथैव कृपया मद्वाञ्छितं पूरय ॥ ५५ ॥

ஓ ஈச! உபமன்யு மஹர்ஷியானவர் மாமாவான வஸிஷ்ட மஹர்ஷியின் கிருஹத்தில் சாப்பிட்ட காம தேனுவின் பாலை நினைத்து பிதா கொடுக்கும் மா—கனி கிழங்கு முதலானதுகளை விரும்பாமல் அழும்பொழுது பிதாவான வ்யாக்ரபாத மஹர்ஷி உம்முடைய ஸன்னிதியிலேயே குழந்தையை வைத்து தபஸ் செய்யும் பொழுது பசி உபாதையால் அழுகிற குழந்தையின் பொருட்டு பால் கொடுப்பதற்கு முந்தி எந்த தயை உண்டாயிற்றோ அந்த தயையால் என்னுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்யும். (இச்சரித்ரம 17வது ஸ்துதியின் வியாக்ரபாத சரித்ரத்தில் விளக்கப்பட்டிருக்கிறது.)

वांच्छा नैव कलासु शंकर तथा नैवास्ति कांक्षा श्रियां

नैवास्ते मम भोग्यवस्तु विषया तृष्णा च देवाधिप ।

किन्त्वाशा हि बलीयसी तव पदप्राप्तौ कृपावारिधे

तस्मात्त्वं नय तारकं पदमिमं त्वत्पादसंपूजकम् ॥ ५६

ஓ சங்கரா! எனக்கு வித்தைகளில் ஆசையில்லை ஸம்பத்திலும் ஆசையில்லை. மாலை சந்தனம் ஸ்த்ரீ முதலான போக்ய வஸ்துக்களிலும் ஆசையில்லை. ஓ தேவநாயக! உம்முடைய சரணத்தை யடைவதில் பலமான ஆசை இருக்கின்றது. ஓ கருணைக் கடலே! ஆசையால் உம்முடைய சரணத்தைப் பூஜிக்கின்ற என்னை உம்முடைய சரணத்தை அடையச்செய்யும்,

स्वामिन् मामकमानस नटपते दुःखाग्निना दह्यते

चिन्ता चैव दिने दिने मनसि मे नानाविधा जायते ।

दीनोऽह कमिहाश्रये यमपरं त्वामन्तरेण प्रभुं
स्वप्ने वा मम सन्निधाय सहसा कर्तव्यमाज्ञापय ॥ ५७

ஓ ஸ்வாமின்! நடநாயக! என்னுடைய மனம் துக்காக்னியால் பொசுக்கப்படுகிறது. தினம் தினம் நாநாவிதமான சிந்தையும் உண்டாகின்றது. துக்கத்தை நிவர்த்திப்பதில் ஸமர்த்தரான உம்மை விட்டு வேறு எவரை மூடனான நான் அடைவேன்? ஸ்வப்னத்திலாவது வந்து எனக்குச் செய்யவேண்டியதை ஆக்ஞை செய்யும்.

चिता चिन्ता तयोर्मध्ये चिन्ता नाम गरीयसी ।
सजीवं दहते चिन्ता निर्जीवं दहते चिता ॥

சிதை சிந்தை இவைகளுக்குள் சிந்தையே மேலானது. ஏனென்றால்? சிந்தை ஜீவனோடு கூடிய சரீரத்தைப் பொசுக்குகின்றது. சிதாக்கினி ஜீவனில்லாத சரீரத்தைப் பொசுக்குகின்றது என்ற நீதி வாக்கியப்படி சிந்தை மிகவும் துக்ககரீ. இவ்வாறே ஔவையார் நல்வழியில் கூறுகின்றார்.

வருந்தி யழைத்தாலும் வாராது வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா—விருந்தோங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தாநினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்.

தமக்கு வாராதவைகள் வருந்தி அழைத்தாலும் வாராவாம். தமக்கு வருமவைகள் போமின் என்று வெறுத்தாலும் போகாவாம். இவ்வுண்மையை அறியாமல் ஏக்கமுற்று மனம் புண்ணாகும்படி அவைகளைத் தாங்கள் நீடித்த காலம் முடிவின்றி சிந்தித்து மாண்டுபோவதே மனிதருடைய தொழிலாகும். ஆதலால் சிந்தா துக்கத்தை

விலக்குவதற்கு ஈசனுடைய அருளே காரணமாகும் என்பதை இந்த ஸ்துதியால் ஸ்துதி கர்த்தா நிரூபிக்கின்றார்.

कुर्वन् दीक्षितवंशजेषु करुणामन्यैरलभ्यां सदा
भक्ताभीप्सितमादरान्नटपतिस्संपूरयन्प्रत्यहम् ।
चेतस्सद्मनि योगिनां च वसतिं बोधप्रदीपान्विते
तन्वन् दीनदयानिधिर्विजयतां तारेशचूडामणिः ॥ ५८

தில்லை தீக்ஷிதர்களென்கிற ப்ராம்மணோத்தமர்களின் வம்சத்தில் ஜனித்த மனுஷர்களிடத்தில் அன்னியர்களுக்கு மிகவும் துர்லபமான தயையைச் செய்கின்றவரும் தினம் தினம் பக்தர்களுடைய இஷ்டங்களைப் பூர்த்திசெய்கின்றவரும் அறிவாகிற விளக்குடன் கூடிய யோகிகளுடைய மனோக்ருஹத்தில் வாஸம் செய்கின்றவரும், தீனதயாநிதியும், ஸகல ஜனங்களுக்கும் ஸந்தோஷத்தைத் தருகின்ற சந்திரனை சிரஸில் தரிப்பவருமான நடநாயகர் ஸர்வோத்கர்ஷமாய் ப்ரகாசிக்கின்றார்.

मस्ते दिव्यधुनीं च शीतकिरणं भास्वज्जटामण्डलं
बिभ्राणं गरलं गले डमरुकं वह्निं च हस्तद्वये ।
ध्येयं कुञ्चितवामपादकमलं सन्दर्शयन्तं करात्
भक्तानामभयप्रदाननिरतं वन्दे सभेशं मुहुः ॥ ५९

சிரஸ்ஸில் கங்கையையும், சந்த்ரனையும், ஜடாஸமூஹத்தையும் கண்டத்தில் காலகூட விஷத்தையும், வலது கரத்தில் டமருகத்தையும், இடது கரத்தில் அக்னியையும் தரித்திருக்கின்றவரும் தேவ, முனி, யோகிந்த்ரர்களால்

த்யானம் செய்யத்தகுந்த கொஞ்சம் (வளைந்த)வணங்கின வாம (இடது) சரணாரவிந்தத்தை ஒரு இடது கரத்தால் காண்பிக்கின்றவரும், மற்றொரு வலது கரத்தால் பக்தர்களு க்கு அபயத்தைத் தருகின்றவருமான சித்ஸபாநாயகரை அடிக்கடி நமஸ்கரிக்கின்றேன். டமருக மென்பது வ்யா கரணாதி மஹாசாஸ்த்ரங்களை ப்ரகாசிக்கச் செய்த தும் தன்மூலமாக ஸம்ஸார ஸமுத்ரத்தில் மூழ்கின. ப்ராணிகளை எழுப்புகின்றதுமான பெரியத்வனியுள்ள சிறிய உருவமுடைய ஒரு வாத்ய விசேஷம்.

स्फुरड्डमरुनिध्वाननिर्जितांभोधिनिस्वनः

பிரகாசிக்கின்ற டமருகத்தின் பெரிய சப்தத்தால் ஜயிக்கப்பட்ட ஸமுத்ர சப்தத்தை உடையவர் என்று ஸ்ரீ நடேச ஸஹஸ்ரநாம வசனம். இவ்வாறே ஒரு புராதன பக்த சிகாமணியும் ஸ்துதிக்கின்றார்.

लोकानाहूय सर्वान् डमरुकनिनदैः घोरसंसारमग्नान्
दत्वाऽभीतिं दयालुः प्रणतभयहरं कुञ्चितं वामपादम् ।
उद्धृत्येदं विमुक्तेरयनमिति कराद्दर्शयन् प्रत्ययार्थं
बिभ्रद्वह्निं सभायां कलयति नटनं यश्शिवो नस्सपायात् ॥

இது ஸ்ரீ திவ்ய நடேச மூர்த்தியின் அத்யுத்தம ஸார த்யான ஸ்துதியாகும். இதன் விரிவுரையைப் பின் ஒரு ஸமயம் எழுதுவோம்.

गौरी वक्त्रसरोरुहे क्षणरतं कारुण्यसिन्धुं विभुं
श्रीमद्व्योमसभान्तरे च नटनं कुर्वन्तमानन्दतः ।
आनन्दावहदिव्यरूपममलं नित्येष्टसन्दायकं
सद्रत्नाभरणोज्वलं नटपतिं वन्दे सभेशम् सदा ॥ ६०

ஸ்ரீ பார்வதீ தேவியின் முககமல தர்சனத்தில் ஆசை யுள்ளவரும், கருணைக் கடலும், வ்யாபகரும், ஸ்ரீமதாகாச ஸபையின் நடுவில் ஆனந்தத்தால் நடனம் செய்கிறவரும் ஆனந்தத்தைத்தருகின்ற திவ்ய மங்கள மூர்த்தியை உடையவரும், நிர்மலரும், பக்தர்களுடைய இஷ்டங்களை அளிக்கின்றவரும். உயர்ந்த ரத்ன பூஷணங்களால் ப்ரகாசிக்கின்றவரும், ஸபாபதியுமான நடநாயகரை எப்பொழுதும் நமஸ்கரிக்கின்றேன்.

उद्यत्फणारत्नविराजमान भूषाभुजङ्गावलिभासमानम् ।
आनम्रदेवावृतकुञ्चितांघ्रिमानन्ददं नौमि सभाधिनाथम् ॥ ६१

ப்ரகாசிக்கின்ற படங்களிலிருக்கின்ற சிரோ ரத்னங்களால் விளங்குகின்ற ஆபரண பூதங்களான ஸர்ப்ப ஸமூகங்களால் ப்ரகாசிக்கின்றவரும், நமஸ்கரிக்கின்ற தேவர்களால் சூழப்பட்ட குஞ்சித சரணம் பொருந்தியவரும், ஆனந்தத்தைத் தருகின்றவருமான ஸபாநாயகரை நமஸ்கரிக்கின்றேன்.

शैलेन्द्रकन्यामुखचन्द्रबिंबसुधारसास्वादनलोलदृष्टिम् ।
व्याघ्रांबरालंकृतदिव्यदेहसमुज्वलं नौमि मृगाङ्कमौलिम् ॥ ६२

பார்வதிதேவியினுடைய முகமாகிற சந்திர பிம்பத்தின் அம்ருத ரஸத்தினுடைய பானத்தில் ஆசையுள்ள கண்களை யுடையவரும், புலித்தோலால் அலங்கரிக்கப்பட்ட மங்கள மூர்த்தியினால் பிரகாசிக்கின்றவருமான சந்திர சூடரை நமஸ்கரிக்கிறேன்.

नाथ त्वच्चरणारविन्दनिकटे विद्योतमानं सदा
श्रीमद्रत्नसभापतिं च भगवन् श्रीचन्द्रमौलीश्वरम् ।

अम्बामम्बुजलोचनां भगवतीं गौरीञ्च वन्देऽन्वहं
स्वर्णाकर्षणभैरवं च फलदं त्वत्पार्श्वगम् भक्तितः ॥ ६३

ஓ நாத! உன்னுடைய சரணகமல ஸமீபத்தில் பிரகாசிக்கின்ற ரத்ன ஸபாபதியையும், சந்திரமௌளீச்வரரையும், பிரகாசிக்கின்ற கண்களையுடைய பரம பூஜ்யையான "லோக மாதாவான" பார்வதியையும், இடது பார்ச்வத்தில் பிரகாசிக்கின்ற ஸகல ஸம்பத்துக்களையும் தருகின்ற ஸ்வர்ணுகர்ஷண பைரவ மூர்த்தியையும், பக்தியினுல் எப்பொழுதும் நமஸ்கரிக்கின்றேன். சுமார் 200 வருஷத்திற்குமுன் தீக்ஷித சிரேஷ்டர்கள் இந்த பைரவ மூர்த்தியினுடைய பாதத்தில் செப்புத் தகட்டை இரவு அர்த்த ஜாம பூஜா ஸமயத்தில் சாத்திக் காலையில் அந்த மூர்த்தியின் பிரபாவத்தால் ஸ்வர்ணமயமான அந்தத் தகட்டைக்கொண்டு ஜீவனம் செய்தார்கள் என்று பழமொழி கூறுகின்றுர்கள். ஆதலால் சுவர்ணுகர்ஷண பதமானது அன்வர்த்தமாயும் இருக்கின்றது.

श्रीमद्राज सभान्तरेऽतिरुचिरे चित्तप्रभाभास्वरे
पीठे रत्नमये स्थितं गिरिजया साकं नटाधीश्वरम् ।
नानादेशसमागतैर्नरवरैस्तोष्टूयमानं सदा
दृष्ट्वा मामकमानसं पशुपते सम्मोदमाविन्दति ॥ ६४

அதிமனேஹரமாயும், விசித்ர சித்திரங்களினுல் சோபிக்கின்றதுமான ஸ்ரீமத் ராஜஸபை என்கிற ஆயிரக்கால் மண்டபத்தினுடைய நடுவில் ரத்னமய பீடத்தில் பார்வதி தேவியோடு பிரகாசிக்கின்றவரும், நானுதேசமிருந்துவந்த பக்த ஸங்கங்களால் ஸ்துதிக்கப்பட்டவருமான நடபதியான உம்மைப்பார்த்து என்னுடைய மனம்

மிக ஸந்தோஷத்தை அடைகின்றது. இப்பவும், ஆனி, மார்கழி தர்சன ஸமயத்தில் ஸஹஸ்ர ஸ்தம்ப மண்டபத்தில் ஸ்ரீமதானந்த நடராஜ திவ்ய மங்கள மூர்த்தியை தர்சிக்கின்ற பக்தகோடிகளுக்கு ஸந்தோஷம் உண்டாகிறது என்பது அனுபவ வேத்யமாகும்.

नाथ त्वत्पदपङ्कजे मम दृढा भक्तिः कदा संभवेत्
किंचानिष्टनिवारणैकनिपुणा जायेत दीने कृपा ।
जित्वा कामसुखारिवर्गमखिलं वैराग्यभाक्स्यामहम्
जन्मव्याधिविवर्जितश्च भगवन् भव्यं कदा प्राप्नुयाम् ॥ ६५

ஓ நாத! உம்முடைய சரணகமலத்தில் அசஞ்சலமான பக்தியானது எப்பொழுது எனக்கு உண்டாகும்? ஸகல அநிஷ்டங்களையும் நிவர்த்தி செய்கின்ற உம்முடைய க்ருபையானது தீனனான எனக்கு எப்பொழுது கிடைக்கும்? காமக்குரோதாதிகளான அகில சத்ரு ஸமூஹத்தையும் ஜயித்து பரம வைராக்யத்தை எப்பொழுது அடைவேன்? அனேக ஜன்ம கோடி புண்யங்களால் பரம சிவபக்தி ஏற்படுகிறதென்றும், அந்த பக்தியால் பரமசிவனுடைய கிருபை கவனிக்க வேண்டியதென்றும், அந்த க்ருபையால் பரம வைராக்யம் ஜனிக்குமென்றும், அந்த வைராக்யத்தால் நித்யானந்த ரூபமான மோக்ஷ ஸுகம் ஏற்படும் என்றும் என்றுமுள்ள சாஸ்த்ரீய கிரமத்தை இந்த ஸ்துதியால் நிரூபிக்கின்றார்.

नाथ त्वच्चरणारविन्दममलं कैवल्यसन्दायकं
स्वामिन्मञ्जुवरेण्यनूपुररुचा संशोभमानं विभो ।
वाणीशादिसुपर्वभिर्मुनिगणैश्चासेव्यमानं सदा
व्याघ्रागारनिवासलोल भगवन् लप्स्ये कदाऽहं प्रभो ॥ ६६

ஓ நாத! ஓ விபோ! ஓ சிதம்பரவாஸ ப்ரிய! ஓ ஸ்வாமின்! மோக்ஷ ஸுகத்தைத் தருகிறதும், மந்திர சிரேஷ்ட ரூபமான பாதஸரங்களுடைய காந்தியால் சோபிக்கின்றதும் பிரம்மதேவன் முதலான தேவர்களாலும், முனிகணங்களாலும் எப்பொழுதும் ஸேவிக்கப் பட்டதுமான உம்முடைய திவ்ய சரணாரவிந்தத்தை நான் எப்பொழுது அடையப்போகிறேன்?

भीतिं त्वं विजहीहि तावकगुणैः प्रीतोऽस्म्यहं वत्स मां
नूनं प्राप्स्यसि मुञ्च खेदमधुनेत्याश्वासयन् मां प्रभो ।
वाण्या हर्षसमुत्थया नटपते मन्मानसस्यातुलं
सन्तोषं जनयिष्यसीश भगवन् दीनार्त्तिहारिन् कदा ॥ ६७

தீனர்களுடைய கஷ்டங்களை நிவர்த்தி செய்கின்ற ஓ பிரபுவே! ஓ நடநாயக! ஓ பகவன்! நீ பயத்தை விடு. ஓ வத்ஸனே! "உன்னுடைய குணங்களால் ப்ரீதி அடைகிறேன். என்னை அடையப்போகின்றாய். துக்கத்தைவிடு" என்று சந்தோஷத்தினாலுண்டான வார்த்தையினால் என்னை ஆச்வாஸப்படுத்தி என்னுடைய மனதிற்கு அதிக ஸந்தோஷத்தை எப்பொழுது உண்டு பண்ணப்போகிறீர்?

त्वद्भक्तिसेतुमवलम्ब्य विलंघ्य वेगात्
संसारवार्धिमधिगम्य भवत्सकाशम् ।
त्वत्पादपद्मवसतिं मुनिवृन्दलभ्याम्
सत्यं लभेय नटनाथ कदा वदाहम् ॥ ६८

ஓ நடநாயக! உன் பக்தியாகிற ஸேதுவை ஸஹாயம் வைத்துக் கொண்டு ஸம்ஸாரமாகிய ஸமுத்திரத்தை வேகத்தினுல் தாண்டி உம்முடைய ஸமீபத்தையடைந்து முனிகணங்களால் அடையத்தகுந்த உம்முடைய சரண கமல வாஸத்தை நான் எப்பொழுது அடைவேன் சொல்லும்.

जाने नो जनने गते सुचरणो यज्ञेश दुष्कर्मकृत्
जाने किन्तु कृतं द्वयं नटपते मानुष्यलब्धिर्यतः ।
पुण्याधिक्यमवैमि तत्र भगवन् सद्वंशजन्मा ततः
त्वत्पादार्चनतो भवेज्जनिपथे खिन्नस्य मे निर्वृतिः ॥ ६९

ஓ யக்ஞ நாத, சென்ற ஜன்மத்தில் புண்யகர்மாவைச் செய்தவனுகவும் இல்லை, பாபகர்மாவைச் செய்தவனுகவும் இல்லை. மனுஷ்ய ஜன்மா ஏற்பட்டிருப்பதால் புண்ய பாபம் இரண்டும் செய்தவனுக ஆகிறேன். (புண்யபாப கர்மாக்களால் மனுஷ்ய லோகத்தை அடைகிருன் என்று அல்லவோ ஶ்ருதி வாக்யம்) ஓ நடபதே! பிராம்மணுேத்தமர்களான தீக்ஷித ஸத் குலத்தில் ஜனித்ததால் புண்ய ஆதிக்யம் இருக்கிறதென்றும் அறிகிறேன். ஸம்ஸார மார்க்கத்தில் துக்கத்தை அடைந்த எனக்கு உம்முடைய சரண பூஜையினுல் ஸுகம் உண்டாகவேணும்.

त्वद्भक्त्यैव सभेश मृत्युमजयत् धीमान्मृकण्ड्वात्मजः
त्वद्भक्त्यैव नरर्षभा नटपते जानन्ति तत्त्वं परम् ।
त्वद्भक्त्यैव हि लेभिरे सुरवराः सर्वेऽपि सर्वं फलम्
तस्मान्मामकवाञ्छितं पशुपते किं वा न देयं विभो ॥ ७०

ஓ ஸபாபதே! புத்திமானுன மார்க்கண்ட மஹர்ஷி யானவர் உம்முடைய பக்தியினுலேயே யமனை ஜயித்தார். ஓ நடநாத நரச்ரேஷ்டர்களான ஜநக ராஜா முதலானவர் கள் உம்முடைய பக்தியினுலேயே தத்வார்த்தத்தை அறி கின்றூர்கள். ஸமஸ்த தேவச்ரேஷ்டர்களும் உம்முடைய பக்தியினுலேயே அம்ருத லாபம் முதலான ஸமஸ்த பலத்தையும் அடைகின்றூர்கள். ஓ பசுநாயக! ஓ விபோ! என்னுடைய இஷ்டத்தைக் கொடுத்து அருள் செய்வீர்.

त्यक्त्वा कल्पतरुं स याति धनिकान् क्षुद्रान् फलप्रेप्सया
गाङ्गं वारि विहाय कूपसलिले स्नातुं प्रयाति प्रभो।
साम्यं दीनदयानिधे स मनुते भृत्यस्य राज्ञा समम्
नाथे त्वय्यखिले स्थिते दिविपदं यो वाऽन्य मासेवते ॥ ७१

ஓ ப்ரபோ! ஓ தீன தயாநிதே! ஸமஸ்த இஷ்டங்களை யும் தருகின்ற ஸகல பூமண்டலங்களுக்கும் நாயகனுன நீர் இருக்கும்பொழுது எவன் அன்ய தைவத்தை ஆச்ர யிக்கின்றுனே அந்தப் புருஷன் பலன்களை அடைய வேண்டுமென்கிற இச்சையினுலே கல்பதருவை விட்டு க்ஷுத்ர தனிகர்களை அடைகிருன். கங்கா ஜலத்தைவிட்டு கிணற்று ஜலத்தில் ஸ்நானம் செய்கிருன். ராஜனேடு வேலைக்காரனை ஸமமாக நினைக்கிருன்.

भुक्त्वा यस्तृणवत्सुखं भवभिया ध्यायन् त्वदंघ्रिं सदा
कालं यापयति प्रभो स भुवने धन्यश्च कैवल्यभाक् ।
यो वा संसृति संभवम् सुखलवं भोक्तुम् न शक्नोत्यहो
त्वत्पादांबुज दर्शने च विमुखस्तस्येश मोक्षः कुतः ॥ ७२

ஓ ப்ரபோ! எந்தப்புருஷன் ஸம்ஸாரத்தில் உண்டாகும் ஸுகத்தை அல்பமாக நினைத்து ஸதாகாலத்திலும் உம்முடைய சரணத்தையே த்யானம் செய்கிறானோ அந்தப் புருஷனே தன்யனும் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அடைகிறவனாகவும் ஆகிறான். எந்தப் புருஷன் ஸம்ஸாரத்தில் உண்டாகின்ற ஸுகத்தை விடுவதற்கு ஸமர்த்தனாக இல்லையோ அந்தப் புருஷன் உம்முடைய தர்சனத்திலே ஆஸக்தி இல்லாதவன். அவனுக்கு மோக்ஷ ஸுகம் எப்படி உண்டாகும்?

वन्द्यानामपि वन्द्य एव भगवन् कालस्य कालो भवान् ।
गौरीनाथा नटेशिताच भुवने धाता च धातुः प्रभो ।
शार्दूलेऽपिपुराऽङ्करोः पशुपते शार्दूल विक्रीडितम्
तस्मात्तावककुञ्चितांघ्रिमनिशं वन्दे दयावारिधे ॥ ७३

ஓ கௌரீபதியே! ஓ நடநாயக! நீர் பூஜ்யர்களுக்கும் பூஜ்யன். நீர் அந்தகனுக்கும் அந்தகன். நீர் பிரும்மதேவருக்கும் ஸ்ருஷ்டி கர்த்தர். ஓ பசுபதே! முன்னொரு ஸமயத்தில் புலியினிடத்தில் புலிக்கிரீடை செய்தவர். ஓ தயாநிதே! உம்முடைய குஞ்சித சரணத்தை ஸதா நமஸ்கரிக்கின்றேன். இந்த ஸ்துதி சார்த்தூல விக்ரீடித விருத்தம் என்றும் ஸூசனம் செய்திருக்கின்றார்.

द्रष्टव्येषु किमुत्तमं नटपते रानन्द नृत्तं क्षितौ
प्राप्तव्येष्वपि किं तदीयकुसुमम् श्राव्येषु किं तत्कथा ।
किं स्वाद्येषु तदीयगन्धसलिलम् ध्येयेषु किं तत्पदम्
तत्पादांबुजसेकमेव हृदये ध्यायन्ति यद्योगिनः ॥ ७४

